உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# முருகத்தியானம்.

இஃது,

சைவ நூல்களினின்று திரட்டப்பட்டு,

மயிலை

**கன்னியப்ப முதலியாரவர்களால்**

சென்னை - சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1928. [அணா 4.

ரிஜிஸ்டர் காபிரைட்.

கடவுள் துணை.



## விநாயகர் வணக்கம்.

அகரமென வறிவாகி யுலக மெங்கு
மமர்ந்தகர வுகரமக ரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
பலவேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில்பொரு ளுண்கினையு மிடர்தீர்ந் தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல்லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளு
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக
னகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

ஓங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிரா யிருப்பானை யுரகவேந் தன், றாங்குநெடு நிலத்தானை முகத்தானை வதைத்தானைச் சயில வானைப், பாங்குவைத்து மழுத்தானை பரித்தான்றந் தளித்தானைப் பசும்பொன் றேரேட்டுப், பூங்கமல பதத்தானைப் பெருவிலைந்து கரத் தானைப்போற்றல் செய்வாம்.

## சித்தி புத்திகள் வணக்கம்.

கருணைமதம் பொழிமுகத்துக் கணேசரவர் தமக்கறிவுந் தொழிலுமான, வருளெனுமுண் மையையெவரு மறியவவருமை யிவை தரித்த ஞான்று, மொருமுனியோம் பியதழலி னவதரித்த ஞான்றுமுட னுகித்தோன்றித், திருவுளத்தின் வழிநிற்குஞ் சித்தி புத்தி யெனுமிவர்தாள் சென்னிசேர்ப்பாம்.

# ஸ்ரீ மகா வரசித்தி கணபதி யந்திரம்.



அஸ்யஸ்ரீ மகா கணபதி, மஹா மந்த்ரஸ்யா, கணகருஷி: காயத்ரீ சந்த: ஸ்ரீமகா கணபதியர்த் தேவதா.

க்ளாம் பீஜம், க்ளீம் சத்தி, க்ளூம் கீலகம், ஸ்ரீமகா கணபதி ப்ரசாத சித்யர்த்தே, ஜபேவினியோக:, (க்ளாம் இத்யாதி) கரஷடங்கன்னியாஸ:

## மூல மந்த்ரம்.

ஓம் ஸ்ரீம், ரீங், க்லீம், க்லௌம், கம், கணபதியே வம் வர வரதா, ஸர்வஜகம்மே வஸமானய ஸ்வாஹா.

---

இந்த வரசித்தி விநாயக யந்திரத்தை விதிப்படி தகட்டில் செதுக்கி நியாஸ பூர்வமாக நித்திய பூஜை செய்துவரின், வாக்கு சித்தியையும் ஜெகவசியமும் இஷ்டகாமியார்த்தங்களையும் அடைவார்கள்.

உ

சிவமயம்.

# விநாயகர் பூஜாவிதி.

சுலோகம்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரஸந்நவதனம் த்யாயேத்
ஸர்வவிக்நோப ஸாந்தயே.

[என்று சொல்லி, இரு கன்னங்களிலும் குட்டிக்கொண்டு ஒரு பீடத்தில் விநாயகரை ஸ்தாபித்து, எதிரில் ஒரு கலசம் வைத்துக் கொண்டு ஒரு பீடத்தில் உட்கார்ந்து.]

## ப்ராணயாமம்.

ஆஸநேவிநியோகஃ, ஆஸனந்நமஃ பூம்யாதி ஊத்துவலோகஸ்ய உபர்யஸ்துதிவாகாஃ, தஸப்ரணவஸம்யுக்தம் த்ரிராவிர்த்திபுநஃ புநஃ அவ்குள்யக்ரை நாஸிகாக்ரம், ஸம்பீட்டியாம் பாபநாஸநம் ப்ராணயாமம் ஹிதம் ப்ரோக்ததம் ருஷிபிஃ பரிகல்பிதம்.

[மேற்கூறிய விதிகளைச்செய்து, பிறகு இடது கையில் ஒரு புஷ்பம் வைத்து வலதுகையால் மூடி வலது துடையின்மேல் வைத்துக்கொண்டு]

## சங்கல்பம்.

சுபாப்யாம்சுபே, சோபனே முகூர்த்தே, ஆத்யப்ரம்மணஃ, துவிதீயப்ரார்த்தே, ஸ்வேதவராஹகல்பே, வைவஸ்வத மங்வந்த்ரே, கலியுகே, ப்ரதமபாதே, ஜம்புத்வீபே, பாரதவருடே, பரதகண்டே, அஸ்மின், வர்த்தமானே, வ்யவகாரிக, சாந்த்ர ஸௌரமானேன்,

ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணும் மத்யே,—ஸம்வத்ஸரே—அய னே—ருதௌ—மாஸே—பக்ஷே—வாஸரே—திதி—நக்ஷத்திர யுக் தாயாம், சுபநக்ஷத்திர, சுபயோக, சுபகரண, ஏவங்குண, விஸே ஷண, விஸிஷ்டாயாம், சுபதிதௌ, அஸ்மாஹம் [மம] ஸஹகுடும் பாணும், க்ஷேமஸ்த்தைர்ய விஜய ஆயுராரோக்ய ஐஸ்வர்யாபி விர்த் யர்த்தம், தர்மார்த்த காம்ய மோக்ஷ சதுர்வித பல புருஷார்த்த ஸித்யார்த்தம், இஷ்டகாம்யார்த்த ஸித்யார்த்தம் புத்ர பௌத்ராபி விர்த்யர்த்தம், மனோவாஞ்சாபல ஸித்யார்த்தம் வரசித்தி விநாயக மூர்த்தே ப்ரீத்யர்த்தம், யாவர்ஸக்கிய தியான மாவாஹனாதி ஸம ஸ்த ஷோடசோபசார பூஜான்சு கரிஷ்யே நம:

[என்று கையிலுள்ள புஷ்பத்தை கலசத்தின்மீது சமர்ப்பித்த பிறகு கலசபூஜை செய்யவேண்டும்.]

## கலஸபூஜை.

(ஷெ கலசத்தின்மேல் வலதுகையால் மூடி)

கலஸஸ்யமுக்கெ விஷ்ணுகண்ட்டே ருத்ரஸ்ஸ மாஸ்ரித:
மூலேதத்ரஸ்திதோப்ரஹ்ம, மத்யேமாத்ருகருணஸ்திதா:
குக்ஷௌ துஸாகராஸ்ஸர்வே, ஸப்தத்வீபாவசுந்தரா:
ருக்வேதோதயஜுர்வேதஸ், ஸாமவேதோஹ்யதர்வண:
அங்கைஸ்ச ஸஹிதாஸ் ஸர்வே, கலஸாம்புஸமாஸ்ரிதா:

[என்று கலஸத்திலுள்ள ஜலத்தை மாவிலையால் எடுத்துப் பூஜா திரவியத்தின்மீதும், விநாயகமூர்த்தியின் மீதும், தன் சிரசின் மீதும் புரோக்ஷித்துக்கொண்டு.]

" ஆயேய்ந்து கணேஸ பூஜார்த்தம், துரிதக்ஷயகாரக:, கங்கேச யமுனேசைவ, கோதாவரி, ஸரஸ்வதி, நர்மதே, ஸிந்து, காவேரி,

---

(மேலே கோடுபோட்ட இடங்களில் பூஜாதினத்திற்குரிய வருஷம், அயனம், ருது, மாஸம், பக்ஷம், வாரம், திதி இவைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.)

[மம] என்னும் சொல்லை பிரமசாரியும், [அஸ்மாகம்] என்னும் சொல்லை கிருகஸ்தனும் உபயோகப்படுத்த வேண்டும்.

ஜலேஸ்மின், ஸன்னிதிங்குரு" என்று அக்கும்பத்திற்கு மேற்றிசையில் * யந்திரமிட்டு விநாயகமூர்த்தியை எழுந்தருளச்செய்து புஷ்பம் அக்ஷதையுங்கொண்டு,

"த்யாயேத் கஜானனம் தேவம், தப்தகாஞ்சன ஸந்நிபம், சதுர்புஜம் மஹாகாயம், ஸர்வாபரணபூஷிதம், தண்டாக்ஷமாலா பரசு, பூர்ணமோதக தாரிணம், பாஸாங்குஸதரம்தேவம், த்யாயேத் சித்திவிநாயகம், ஸ்ரீ சித்திவிநாயகாயநம: த்யானம் ஸமர்ப்பயாமி" என்று சிந்தித்து,

"விநாயக நமஸ்தேஸ்து, கௌரீ மலஸமுத்பவ, இமாம், க்ருதாம்பியாம் பூஜாம், க்ருஹாண கணநாயகா ஸ்ரீகணநாயகாயநம: ஆவாஹனம் ஸமர்ப்பயாமி" என்று ஸ்தாபனஞ்செய்து,

"மௌக்திகை புஷ்யராக்ஸ்ச, நாநாரத்னவிராஜிதம், திவ்விய ஸிம்மாஸனம் ஸாரூப்ரீத்யர்த்தம் ப்ரதிக்குஹ்யதாம், ஸ்ரீ விநாயகாயநம: ஆஸனம் ஸமர்ப்பயாமி" என்று பீடமிட்டு,

"அர்க்யம் க்ருஹாணதேவேச, கணாதிப கஜானன, கந்ததூர்வாக்ஷதைர்யுக்தம், கங்கா ஜலமிதம்சுபம், ஸ்ரீ கஜானனாயநம: அர்க்யம் ஸமர்ப்பயாமி" என்று அர்க்யம் கொடுத்து,

"கௌரீபுத்ர நமஸ்தேஸ்து, சங்கரப்ரியநந்தன: பக்த்யா பாத்யமயாதத்தம், க்ருஹாணஸ ரஸத்தம், ஸ்ரீ கௌரிபுத்ராயநம: பாத்யம் ஸமர்ப்பயாமி" என்று பாத்யம் கொடுத்து,

"அநாதநாதசர்வேச, கீர்வாணசுரபூஜித, நிர்மலம் கந்தஸம்யுக்தம், க்ருஹாணஸமனம்விபோ, ஸ்ரீ சர்வேஸாயநம: ஆசமனீயம் ஸமர்ப்பயாமி" என்று ஆசமனம் கொடுத்து,

"ததிக்ஷீரஸமாயுக்தம், மத்வாஜ்யேன ஸமன்விதம், மதுபர்க்கம் க்ருஹாணேதம், கஜவக்த்ர நமோஸ்துதே, ஸ்ரீ கஜவக்த்ராயநம: மதுபர்க்க நைவேத்யம் ஸமர்ப்பயாமி" என்று தேன், பால், பழம் முதலியவைகளைச் சாமானியமாக நிவேதித்து,

---

* ஜலத்தினால் முக்கோணம் போடவும்.

"ஸ்நானம் பஞ்சாம்ருதேர் திவ்ய, குருஷ்வஸுரஸத்தம, பக்த்பாதுப்யம் மயாதத்தம், விக்னராஜ நமோஸ்துதே, ஸ்ரீ விக்னராஜாயநமஃ பஞ்சாமிர்த ஸ்நானம் ஸமர்ப்பயாமி" என்று பஞ்சாமிர்த (தேன், பால், வாழைப்பழம், சர்க்கரை, நெய் இவ்வைந்துங் கலந்து) அபிஷேகஞ்செய்து,

"கங்காதிஸர்வதீர்த்தேஸ்து, ஆனீத்யைர் நிர்மலைஸ்ஸுபை வாஸிதைருதகைர்தேவ, ஸ்னப்யாமி கஜானன, ஸ்ரீ கஜானனுயநமஃ ஸுத்தோதகஸ்நானம் ஸமர்ப்பயாமி" என்று கங்கை முதலிய சுத்த ஜலத்தால் அபிஷேகஞ்செய்து,

"ரக்தவஸ்த்ரம் த்வயம்தேவ, கௌரீபவ பவப்ரபோ, க்ருஹாணேதம் மயாதத்தம், விக்னராஜ நமோஸ்துதே, ஸ்ரீ விக்னராஜாய நமஃ வஸ்திரயுக்மம் ஸமர்ப்பயாமி" என்று நல்ல இரண்டு பீதாம்பரங்களையுடுத்தி,

"உபவீதம் ப்ரம்மஸுத்ரம் ப்ராம்ஹணு நிர்மிதம்புரா, நாகயக்ஞோபவீதேதம், க்ருஹாண கணநாயக ஸ்ரீ கணநாயகாயநமஃ யக்ஞோபவீதம் ஸமர்ப்பயாமிஎன்று" பூணூல்தரித்து,

"சந்தனு கருகற்பூர, ம்ருகநாபிஸமன்வீதம், கந்தாந்தாரையாமி விக்னேஸ, ஸர்வாபீஷ்ட ப்ரதாயக, ஸ்ரீ விக்னேஸாயநமஃ கந்தாந்தாரையாமி" என்று திருமேனி முழுவதும் சந்தனத்தைத் தெளித்து,

"அக்ஷதாந் தவளாம் சுப்ரான், ஹரித்ராமிஸ்ரிதானபி, மயா ஸமர்ப்பிதாந்தேவ, ருக்ஹாணத் விரதானன ஸ்ரீ ஸர்வாபீஷ்ட ப்ரதாயகாயநமஃ அக்ஷதாம் ஸமர்ப்பயாமி" என்று அக்ஷதை (மஞ்சள் அரிசி) பொற்சுண்ணம், பூந்தாது முதலியவற்றைச் சாத்தி,

"ஸுகந்தினி ஸுபுஷ்பாணி, ஜாஜீகுந்தமுகானிச, ஏகவிம்ஸதி புஷ்பாணி, க்ருஹாணத்வம் விநாயக, ஸ்ரீ விநாயகாயநமஃ புஷ்பாணி பூஜையாமி" என்று 21-மலர்களைச்சாத்தி பத்ர புஷ்பங்களிஞல் கீழ்கண்ட சோடச நாமங்களிஞல் அர்ச்சிக்கவும்.

| | |
|---|---|
| ஓம் சுமுகாய நம: | ஓம் தூமகேதுவே நம: |
| ,, ஏகதந்தாய நம: | ,, கணாதியக்ஷாய நம: |
| ,, கபிலாய நம: | ,, பாலசந்த்ராய நம: |
| ,, கஜகர்ணிகாய நம: | ,, வக்ரதுண்டாய நம: |
| ,, லம்போதராய நம: | ,, சூர்ப்பகர்ணாய நம: |
| ,, விகடாய நம: | ,, ஹேரம்பாய நம: |
| ,, விக்நராஜாய நம: | ,, ஸ்கந்தபூர்வஜாய நம: |
| ,, விநாயகாய நம: | ,, மஹாகணபதியே நம: |

நாநாவித பத்ர புஷ்பாணிம் ஸமர்ப்யாமி என்று செய்தபிறகு,

## அங்க பூஜை.

| | |
|---|---|
| ஓம் கணேசாய நம: | ஓம் பாதௌ பூஜையாமி |
| விக்னராஜாய நம: | ஜாநீ பூஜைபாமி |
| ஆகுவாஹனாய நம: | ஊரும் பூஜைப்பாமி |
| ஏரம்பாய நம: | கடிம் பூஜையாமி |
| தேவதேவாய நம: | நாபிம் பூஜையாமி |
| லம்யோதராய நம: | உதரம் பூஜையாமி |
| கணநாயகாய நம: | ஹிருதயம் பூஜையாமி |
| ஸ்தூலகண்டாய நம: | கண்டம் பூஜையாமி |
| ஸ்கந்தாக்ரஜாய நம: | ஸ்கந்தௌ பூஜையாமி |
| சதுர்ப்புஜாய நம: | புஜௌ பூஜையாமி |
| கஜவக்த்ராய நம: | வக்த்ரம் பூஜையாமி |
| விக்னஹந்த்ரே நம: | நேத்ரே பூஜையாமி |
| சூர்ப்பகர்ணாய நம: | கர்ணௌ பூஜையாமி |
| ஏகதந்தாய நம: | தந்தம் பூஜையாமி |
| குமாரகுருவே நம: | சிரம் பூஜையாமி |
| ஸர்வேஸ்வராய நம: | ஸர்வாங்கானி பூஜையாமி |

என்று பூஜை செய்து பிறகு,

| | |
|---|---|
| ஓம் சுமுகாய நம: | ஓம் மாவிலபத்ரம் பூஜையாமி |
| கணாதிபதியே நம: | பிரங்கராஜபத்ரம் பூஜையாமி |
| உமாபுத்ராய நம: | வில்வபத்ரம் பூஜையாமி |
| கஜானனாய நம: | தூர்வபத்ரம் பூஜையாமி |
| லம்போதராய நம: | பதரீபத்ரம் பூஜையாமி |

ஓம் ஹராசுனவே நம:
கஜகர்ணய நம:
குகாக்கிறஸாய நம:
ஏகதந்தாய நம:
கஜவக்த்ராய நம:
ஸுராக்ரகண்யாய நம:
பாலஸந்த்ராய நம:
விகடாய நம:
விநாயகாய நம:
கபிலாய நம:
பின்னதந்தாய நம:
பத்னிஹீணய நம:
வடவே நம:
சூர்ப்பகர்ணய நம:
மூஷிகவாஹனய நம:
ஸித்திவிணயகாய நம:

ஓம் துத்தூரபத்ரம் பூஜையாமி
துளசிபத்ரம் பூஜையாமி
காமஞ்சரிபத்ரம் பூஜையாமி
புரஹதிபத்ரம் பூஜையாமி
ஸமிபத்ரம் பூஜையாமி
தேவதாரபத்ரம் பூஜையாமி
மருவபத்ரம் பூஜையாமி
கரவீபத்ரம் பூஜையாமி
துருமோற்பலபத்ரம்பூஜையா [மி
அர்க்கபத்ரம் பூஜையாமி
அர்ச்சுனபத்ரம் பூஜையாமி
விஷ்ணுகிராந்திபத்ரம் பூஜை [யாமி
தாடிமபத்ரம் பூஜையாமி
ஜாஜிபத்ரம் பூஜையாமி
கண்டலேபத்ரம் பூஜையாமி
சிந்துவாரபத்ரம் பூஜையாமி

ஸர்வஸித்திப்ரதாயகாயநம: ஏகவிம்ஸதிபத்ராணிபம் பூஜையா என்று இருபத்தொரு மந்திரங்களால் மேற்சொல்லிய புஷ்பங்களினல் அர்ச்சித்து,

## அஷ்டோத்ரம்.

ஓம் விநாயகாய நம:
விக்கினராஜாய நம:
கணநாதாய நம:
கஜாநநாய நம:
மகோதராய நம:
மகாதேவாய நம:
ஸிதிகாஞ்சன சமத்யுதயே [நம:
ஏகதம்ஷ்டிரோத்கடாய நம:
தேவாய நம:
கஜவக்த்ராய நம:
மகாபலாய நம:
நாயகக்ஞோபவீதியே நம:
நாகாபரணபூஷிதாய நம:
சர்வார்த்தசம்பதாதாராய [நம:
கணுதியக்ஷாய நம:

ஓம் வரப்பிரதாய நம:
உருத்திரதாயாய நம:
உதாராய நம:
நாயகாய நம:
பிரமதாதிபாய நம:
பத்மராகத்யுதயே நம:
சோமாய நம:
ரத்தமால்லியானுலேபநாய [நம:
அபலாய நம:
பாலரூபிணே நம:
சுமுகாய நம;
சுரப்பிரியாய நம:
பிரபவே நம:
ஈசபுத்திராய நம:
ஈப்ஸிதார்த்தப் பிரதாயகாய [நம:

ஓம் ஸ்ரீதாய நம:
சுபாய நம:
ஏகதந்தாய நம:
ஏகவீராய நம:
அநேகதாய நம:
ஏகஸ்மை நம:
ஏகப்ருதே நம:
விசுவப்ருதே நம:
விசுவஸ்ருஜே நம:
விசுவஸ்மை நம:
சர்வப்பிரபவே நம:
சர்வபாவநாய நம:
பாக்கியதாய நம:
பவதாய நம:
பாகிநே நம:
போகதாய நம:
போகபாவநாய நம:
கவயே நம:
கார்யாய நம:
கரீநாய நம:
கர்த்திரே நம:
கிருதவே நம:
கிருதிநே நம:
கிருத்தியவிதே நம:
புண்ணியாய நம:
பூரணாய நம:
பூர்ணோதராய நம:
புண்ணியகீர்த்தியே நம:
புராதநாய நம:
பர்த்திரே நம:
சிவாய நம:
சாந்தாய நம:
சகந்நாதாய நம:
சாஸ்வதாய நம:
சுவேதபரிதாநாய நம:
திரயக்ஷாய நம:
கனகசுப்பிரபாய நம:
சிவசாம்பியாய நம
மகாதேஜஸே நம:

ஓம் மஹாப்பிராக்ஞாய நம:
சர்வக்ஞாய நம:
ஞானசம்பன்னாய நம:
சர்வாபரணபூஷிதாய நம:
பாபாபநோதநாய நம:
தேவாய நம:
அலக்ஷ்மிமலநாசநாய நம:
குமாராய நம:
காரணாய நம:
காந்தாய நம:
சர்வசித்திப்பிரதாயகாய நம:
விப்வே நம:
ஈசாய நம:
அதியுக்கிராய நம:
காந்தசர்கிநே நம:
கிருதாந்தகாய நம:
ஸ்துத்தியாய நம:
ஸ்தோத்திரே நம:
ஸ்தோகாய நம:
ஸ்தோத்திராய நம:
திரயீமயாய நம:
வேதாய நம:
வேதாந்தகிருதே நம:
வேத்யாய நம:
விதுஷாம்புபுத்திதாய நம:
புத்தாய நம:
ஓங்காராய நம:
பிரமவிதே நம:
பிராமணாய நம:
பிரமணே நம:
பிரமபராய நம:
பராய நம:
சர்வசாக்ஷிணே நம:
சத்கதயே நம:
சர்வலோகவேத்யாய நம:
சர்வதாய நம:
சுபகாய நம:
அவ்யாய நம:
ஸ்ரீ சித்திவிநாயகாய நம:

ஓம் நானுவித மந்த்ர பஷ்பாணி சமர்ப்பயாமி என்று அஷ்டோத்ர சததிவ்ய நாமபூஜை செய்து,

"தசாங்கம் குங்குளம் தூப, முத்தமம் கணநாயக, க்ருஹாண கண ராஜேந்த்ர, விக்னஹாரின்ன மோஸ்துதே, ஸ்ரீகண நாயகாய நம: தூபமாக்ராபயாமி" என்று தூபம் கொடுத்து,

"ஸர்வக்ஞ ஸர்வலோகேஸ, ஸர்வபூதஹிதோதய: க்ருஹாண மங்களம் தீபம், ருத்ரப்ரிய நமோஸ்துதே, ஸ்ரீ சர்வக்ஞாய நம: தீபம் தர்ஸயாமி" என்று தீபம் காட்டி,

பின்பு மூர்த்தி சந்நிதிக்கு எதிரே நிலத்தைச் சதுரமாகமெழுகி அக்ஷதை, புஷ்பம், சாத்தி, பரிகல பாத்திரம் வைத்து, சுத்தான்னம், சித்திரான்னம், மோதக முதலிய 21-பலகார வகைகள், தேங்காய், வாழை, பலா, மா, முதலிய 21-கனிகள், கரும்பு, பாயசம் பாணகம், நீர்மோர் முதலிய பானவர்க்கங்கள் ஆகிய இவைகளைச் சுத்தம் செய்து வைத்து,

"ஓம் அஸ்திராய நம:" என்று ஜலம் புரோக்ஷித்து, "ஓம் கவசாய நம:" என்று நீர்வளையக்காட்டி,

## சுலோகம்.

"நைவேத்தியம் ஷட்ரஸோபேதம் பலலட்டு ஸம்யுதம், மோதகம் பரமான்யஸ்ச நமஸ்த விக்னநாசன ஸ்ரீ விக்னநாசநேய நம:, நைவேத்யம் ஸமர்ப்பயாமி" என்று நைவேதனம் செய்து,

"தாம்பூல முத்தமந்தேவ க்ருஹாண சுரபூஜித, கற்பூர சூர்ண சம்யுக்தம், மயாதத்தமிதம் விபோ, ஸ்ரீ ருத்ரப்ரியாய நம: தாம்பூலம் ஸமர்ப்பயாமி" என்று தாம்பூலம் உபசரித்து,

"ஸதாந்தனதவிக்னேஸ புஷ்டலாந்தனுகிச, பூம்யாம் ஸ்திதானிபகவன், ஸ்வீகுருஷ்வ விநாயக, ஸ்ரீவிக்னேஸாய நம: ஸ்வர்ண புஷ்பம் ஸமர்ப்பயாமி" என்று தக்ஷிணை வழங்கி,

"விக்னராஜ நமஸ்துப்யம் பாமக்ஞான ப்ரணுசன, புனராக்யம் ப்ரதாஸ்யாமி, க்ருஹாண சுரசத்தம: ஸ்ரீவிக்னராஜாயநம: புனராக்ரம் ஸமர்ப்பயாமி" என்று அர்க்கியங் கொடுத்து,

| | | |
|---|---|---|
| ஓம் கஜாதிபாய நம: | தூர்வாயுக்மம் | ஸமர்ப்பயாமி |
| உமாபுத்ராய நம: | " | " |
| அகநாசாய நம: | " | " |
| விநாயகாய நம: | " | " |
| ஈஸ்வரபுத்ராய நம: | " | " |
| விக்னராஜாய நம: | " | " |
| ஏகதந்தாய நம: | " | " |
| இவபக்திராய நம: | " | " |
| ஆகுவாஹனாய நம: | " | " |
| குமாரகுருவே நம: | " | " |
| சுமுகாய நம: | " | " |
| ஸுராக்கிரகண்யாய நம: | " | " |
| ஸ்தூலகண்டாய நம: | " | " |
| குகாக்ரசாய நம: | " | " |
| லம்போதராய நம: | " | " |
| பின்னதந்தாய நம: | " | " |
| விஸாக்னே நம: | " | " |
| காமரூபியே நம: | " | " |
| பாலசந்த்ராய நம: | " | " |
| வக்ரதுண்டாய நம: | " | " |

சர்வசித்திப்ரதாயகாய நம: ஏகவிம்சதி தூர்வாயுக்மம் ஸ்மர்ப்பயாமி

என்று சந்தனத்திற்றோய்த்த இரண்டிரண்டு அறுகினால் இந்த 21-திருநாமங்களையுஞ் சொல்லி அருச்சித்து,

"ஆகுவாஹன தேவேச, விஸ்வவ்யாபின் கஜானன, ப்ரதக்ஷணம் கரோமித்வாம், மமத்வம் ஸன்னிதிம்குரு, ஸ்ரீ ஆகுவாஹனாய நம:, ப்ரதக்ஷணம் ஸமர்ப்பயாமி" என்று வலம் வந்து,

"நமஸ்தே கஜவக்த்ராய, நமஸ்தே கணநாயக, நமஸ்தே தேவ தேவேச, கௌரீபுத்ர நமோஸ்துதே, ஸ்ரீ கௌரீ புத்ராய நம:, நமஸ்காரம் ஸமர்ப்பயாமி" என்று தீர்க்க தெண்டம் செய்து,

"தேவதானவகோபூர, மணிரஞ்சிதபாதக:, க்ஷமன்வதேவதேவேச புத்ராக் னீர்த்திஞ்சதேஹிமே, ஸ்ரீ கஜவக்த்ராய நம:, ப்ராத்

தனம் ஸமர்ப்பயாமி" என்று விநாயகர் அகவல் முதலிய தோத்திரங்களால் பிரார்த்தித்து,

"க்ருதவர்த்திஸ ஹாஸ்த்ரேஸ்ச கற்பூரசகலை ஸ்ததா, நீராஞ்சனம் மயாதத்தம். க்ருஹாண வரதோபவ, ஸ்ரீ கணபதிபாய நம:, நீராஞ்சனம் ஸமர்ப்பயாமி" என்று ஆலத்தி சுற்றி,

"நமஸ்தே தேவதேவேச, நமஸ்தே கணநாயக, நீராஞ்சனம் ப்ரஸ்யாமி, ப்ரசன்னோபவ மேப்ரபோ, ஸ்ரீ தேவ தேவாய நம:, நீராஞ்சனம் ஸமர்ப்பயாமி" என்று ஆலத்தி சுற்றி,

"தேவ தேவகணாத்யக்ஷ, சுராசுர வரார்ச்சிதா அவிக்னம் குருமேதேவ, ஸர்வ கார்யேஸ்து ஸர்வதா, விநாயக நமஸ் தேஸ்து ஸததம் மோதுகப்ரிய, அவிக்னம் குருமேதேவ, ஸர்வ காரியேஸ்து ஸர்வதா" என்று க்ஷமார்பணம் செய்து, முன்கூறிய சங்கற்பங்கூறி, சந்தன புஷ்பாக்ஷதைகளைக் கொண்டு பெரியோர்களைப் பூஜித்து,

" கணேஸப்ரதிக் ருண்யாதி, கணேஸோவைததாதிச, கணேஸஸ்தார கோபாப்யாம் கணேஸாய நமோ நம:, என்று வாயனதானம் செய்து,

சித்திரான்னம் முதலிய அன்னவகைகளையும், பற்பல பலகார வகைகளும் கனிவர்க்கங்களும் நீர்மோர் முதலிய பானவர்க்கங்களும், அடைக்காய் முதலியவும் அமைத்து, முன் சொன்ன மந்திர பூர்வமாக நிவேதனம் செய்து நீர்வளாவி தூபதீபங் கொடுத்து, வலம் வந்து திருவடிகளில் வணங்கி ஷோடச தானங்களை வழங்கி கணேசமூர்த்தியை இருதய கமலத்தில் இருத்தி விநாயக பூஜையை பூர்த்திசெய்தல் வேண்டும்.

தூபம் ஆக்கிராபயாமி, ஸாக்ஷாத்தீபம் தர்ஸயாமி, தூபதீபானந்திரம் ஆசமநீயம் ஸர்ப்பயாமி, நைவேத்யம் நிவேதயாமி, குடோபகாரம் (வெல்லம்) ஸமர்ப்பயாமி, நாரிகேளம் (தேங்காய்-மூடி) ஸமர்ப்பயாமி, கதலீ (வாழை) பழம் ஸமர்ப்பயாமி, மத்யே மத்யே பாநீயம் ஸமர்ப்பயாமி, உத்தராபோஜனம் ஸ்மர்ப்பயாமி, அஸ்தப்ரக்ஷாளனம் ஸ்மர்ப்பயாமி, பாதப் ப்ரக்ஷாளநம் ஸமர்ப்பயாமி, புநராசமநீயம் ஸமர்ப்பயாமி, தாம்பூலம் ஸமர்ப்பயாமி.

என்று தூபதீப நைவேத்யம் செய்தான பிறகு,

மங்களம் பகவான் விஷ்ணு, மங்களம் மது சூதன:
மங்களம் புண்டரீகா க்ஷ்ள, மங்களம் கருடத்வஜ:
மங்களம் பகவான் நித்யம், மங்களம் ப்ரதி சூதந:
மங்களம் பார்வதீ புத்ர, மங்களம் மூஷிகத் வஜ:

என்று, கற்பூர தீபாராதனை செய்யவேண்டும்.

பிரார்த்தனை

பவசஞ்சித பாபௌக வித்வஞ்ஜன விஸேஷணம்,
விக்நாந்தகார பாசபந்தம் விக்நராஜ மஹம்பஜே

மஹா கணாதிபதியே நம: சுவர்ண புஷ்பம் ஸமர்ப்பயாமி, மந்த்ர புஷ்பம் ஸமர்ப்பயாமி, சத்ரம் ஸமர்ப்பயாமி, சாமரம் வீஸயாமி, நிர்த்தநம் தர்ஸயாமி, கீதம் ஸ்ராவயாமி, வாத்யம் கோஷயாமி, ஆந்தோளிதா நாரோஹயாமி, ஸமஸ்த ராஜோபசே வோபசார பூஜாம் ஸமர்ப்பயாமி,

என்று கைகளை தட்டிக்கொண்டு சொல்லியான பிறகு,

பாபோஹம் பாபகர்மாஹம்,
பாபாத்மா பாபஸம்பவ:
த்ராஹிமாங் க்ருபாயாத்தேவம்,
ஸரணாகத வத்ஸல,
ஆத்மப்ரதக்ஷண நமஸ்காரம் ஸமர்ப்பயாமி.

என்று ப்ரதக்ஷண நமஸ்காரம் செய்யவேண்டும்.

மந்த்ரஹீநம் க்ரியாஹீநம்,
பக்திஹீநம் கணாதிப,
யத்பூஜிதம் மயாதேவ,
பரிபூரணம் ததஸ்துதே.

அநேநயதா ஸம்பவித ஷோட ஸோபசார பூஜாயாச நைவேதயே நசபகவான் ஸர்வாத்மக விநாயகோதேவதா ஸுப்ரீதாஸுப் ரஸந்நா வரதாபவந்து.

விநாயகர் பூஜை முற்றிற்று.

உ

கடவுள் துணை.



# முருகத்தியானம்.

## முருகர் திருவழகுத் தோத்திரம்.

ஆறுமுகம் பனிரெண்டு கண்ணுந் தோன்றும்
அழகான யீராறு புஜங்க டோன்றும்
குரும்பிடியும் வடிவேலுங் கையிற் றோன்றும்
குக்குடத்திற் கொடியொரு கலத்திற் றோன்றும்
இருபுரத்திற் கன்னியர்கள் யிசைந்து தோன்றும்
யியலான முப்புரிநூல் மார்பிற் றோன்றும்
சிறுநுதலில் வெண்ணீரு செழித்துத் தோன்றும்
செங்கமலப் பாதமதில் சிலம்பு தோன்றும்
கருநெரியாய் சங்கரனார் விழியிற் றோன்றும்
கண்மணியா சரஹணத்தில் வளரத் தோன்றும்
சருவாணி கரத்திலிவ் வுருவந் தோன்றும்
சங்கரனார்க் குறையுரைத்த வுமையுந் தோன்றும்
வருமடியார் திருமுறையு மபயந் தோன்றும்
வரமருளுங் கருணைசிறு நகையுந் தோன்றும்
மருமாலை கழுத்தணிந்து மஞ்ஞை யேறும்
மன்னவனார் போரூர்வாழ் புண்ணியர்க்கே.

# சுப்ரமண்யர் யந்திரம்.



## நியாஸம்.

அஸ்யஸ்ஸ்ரீ சுப்ரமண்யஸ்தோத்ர மஹா மந்தரஸ்ய அகஸ்திய பகவான் ரிஷிஃ அநுஷ்டுப சந்தஃ, ஸ்ரீ சுப்ரமண்ய தேவதா சம்பீஜம், சுவஹா சக்திஃ, சஃ கீலகம், ஸ்ரீ சுப்ரமண்ய பிரசாத சித்தியர்த்தே ஜபேவிநியோகஃ, ஹிரண்ய சரீராய அங்குஷ்டாப்யாம் நமஃ ஷட் கோணமத்ய நிலயயாய தர்ஜனீப்யாம் நமஃ இக்ஷுதநுத்தராய மத்ய மாப்யாம் நமஃ சிகிவாகனுய அநாமி கப்யாம் நமஃ, சக்தி ஹஸ்தாய கனிஷ்ட காப்யாம் நமஃ சகல துரித விமோசனுய கரதல கரபுஷ்ட் டாப்யாம் நமஃ (ஏவம் ஹிருதயாதி நியாஸஃ)

## த்யானம்.

கனககுண்டல மண்டிதம், முகம், வனஜராஜி விராஜிதலோச னம், நிசித சஸ்த்ர சாரஸின தாரனம, சரவணேற்பவ மீசுதம்பஜே.

## மூலம்.

ஓம் ஸ்ரீம் ஹ்றீம் க்லீம், ஐம், சௌம்ஸஃ சரவணபவாய நமஃ

---

இந்த யந்திரத்தை தகட்டில் விதிப்படி செதுக்கி பூஜைசெய்து வந்தால் லோகவசியம், ராஜவசியம், ஜனவசியம் உண்டாகும். புத்ர தோஷம், பாரியை தோஷம், வியாபார நஷ்டம், மிருத்துகண்டம் இன்னும் பலவித அரிட்ட தோஷங்களும் நிவர்த்தியாகி சகல சம் பத்தையும் விர்த்திசெய்யும்.

# சுப்ரமண்யர் அஷ்டோத்தரம்.

## சுலோகம்.

ஸ்கந்தோ குஹ ஷண் முகஸ்ச
பால நேத்ர சுதப் பிறபு:
பிங்கள: கிரு ததிகா சூனு
சிகிவா ஹோ த்விஷட் புஜஹ.

ஓம் கந்தாய நம:
குகாய நம
சண்முகாய நம
பாலநேத்திரசுதாய நம
பிரபவே நம
பிங்களாய நம
கிருந்திகாசூநவே நம
சிகிவாகநாய நம
துவிஷட்புஜாய நம
திரிஷணேத்திராய நம
சத்திதராய நம
விகிதாசிவப்பிரபஞ்சநாய நம
தாரகாசுரசங்காரிணே நம
ரக்ஷோபலவிமர்த்தநாயநம
மத்தாய நம
பிரபத்தாய நம
உன்மத்தாய நம
சுரசங்கரக்ஷித்திரே நம
மதுபசேனுபதயே நம
பிராக்ஞாய நம
கிருபாளவே நம
பக்தவத்ஸலாய நம
உமாசுதாய நம
சக்திதராய நம
குமாராய நம
கிரௌஞ்சதாரணய நம
சேநாநியே நம
அக்கினிஜன்மனே நம

ஓம் விசகாய நம
சாசாரத்மஜாய நம
சிவசுவாமினே நம
கணசுவாமினே நம
சர்வசுவாமினே நம
சநாதநாய நம
அநந்தசக்தயே நம
அக்ஷோப்பியாய நம
பார்வதிப்பிரியநந்தநாயநம
கங்காசுதாய நம
சரோத்பூதாய நம
பாவகாத்மஜாய நம
ஆகுதயே நம
ஜிரும்பாய நம
பிரஜிரும்பாய நம
உஜிரும்பாய நம
கமலாசனசந்துதாய நம
ஏகவர்ண்ணய நம
துவிவர்ண்ணய நம
திரிவர்ண்ணய நம
சதுர்வர்ண்ணய் நம
பஞ்சவர்ண்ணய நம
பிரஜாபதேய நம
அபராய நம
அக்நிகர்ப்பாய நம
சமிகர்ப்பாய நம
விசுவரேதசஸ நம
சுராரிக்கினே நம

ஓம் இரணியவர்ண்ணுய நம
சுபகிருதே நம
வசுமதே நம
வடவேஷத்திருதே நம
பூஷணே நம
கபஸ்தேயே நம
ககநாய நம
சந்திரவர்ண்ணுய நம
கலாதராய நம
மாயாதரக்ய நம
மகாமாயாய நம
கைவல்ஸியாய நம
கலாத்மகாய நம
விசுதயோனயே நம
அதமயாத்மனே நம
தோஜோநிதயே நம
அநாமயாய நம
பரமாஷ்டிநே நம
குரவே நம
பிரமணே நம
வேதகர்ப்பாய நம
பிரஜஸே நம
வசவே நம
புளிந்தகன்னியா பர்த்திரே நம
மகாசாரசுவதப்பிரதாய நம
ஆசிரதாகிலதாத்திரே நம
சோரக்நாய நம
ரோகநாசநாய நம

ஓம் அநந்தமூர்த்தயே நம
அநந்தாய நம
சிகண்டிகிருதகேதநாய நம
டம்பாய நம
பரமடம்பாய நம
மகாடம்பாய நம
விருஷாகபயே நம
காரணோபாத்ததேகாய நம
காரணுதீதவிக்கிரகாய நம
அநீச்சுவராய நம
பிராணுய நம
பிராணுதாராய நம
பராத்பராய நம
விரத்தபர்த்திரே நம
வீரக்நாய நம
ரக்தாய நம
சரமாய நம
பிங்களாய நம
பகுவர்ண்ணுய நம
கோபதயே நம
தக்ஷிணுத்திய பரப்பிரதாய நம
சர்வேசுவராய நம
லோககுரவே நம
அசுராநீகமர்த்தநாய நம
ஸ்ரீ சுப்பிரமண்ய மூர்த்தியே நம
நாநாவிதமந்த்ர புஷ்பாணி சமர்ப்பயாமி.

சுப்ரமண்யர் அஷ்டோத்தரம் முற்றிற்று.

---

உ

ஸ்ரீ ரஸ் து.

# சுப்ரமண்ய த்ரிசதி நாமாவளி.

ஓம் ஸ்ரீம் சௌம்.

ஓம் சரவணபவாய நம
சரச்சந்த்ராயுதப்ரபாய நம
சசாங்கசேகரசுதாய நம
சசிமாங்கல்யரக்ஷ்ணுய நம
சதாயுஷ்யப்ரதாத்ரே நம
சதகோடிரவிப்ரபாய நம
சசிவல்லபசுப்ரீதாய நம
சசிநாயகபூஜிதாய நம
சசிநாதசதுர்வக்த்ர தேவ
ைதைத்யாபிவஞ்சிதாய நம
சசிகார்த்திஹராய நம
சம்பவே நம
சம்பூபதேசகாய நம
சங்கராய நம
சங்கரப்ரீதாய நம
சம்மியாக்குசுமப்ரீயாய நம
சங்குகர்ணமகாகர்ணப்ரமு
காத்யபிவந்திதாய நம
சசிநாதசுதாப்பிராண நாய
காய நம
சக்திபாணிமதே நம
சங்கபாணிப்ரியாய நம
சங்கபாணிமஷட்களசு ப்ர
பாய நம
சங்கோஷப்ரியாய நம
சங்குசக்ர சூலாதிகாயுதாய
நம
சங்கதாராபிஷேகாதிப்ரீ
யாய நம.
சங்கரவல்லபாய நம
சப்தப்ரம்யாய நம
சப்தமூலாந்தராத்மகாய நம
சப்தப்ரீயாய நம

ஓம் சப்தரூபாய நம
சப்தானந்தாய நம
சசிஸ்துதாய நம
சதகோடிப்ரவிஸ்தார யோச
ுயதமந்த்ராய நம
சதகோடிரவிப்ரக்ய ரத்னசிம்
மாசனுன்கிவதாய நம
சதகோடி மகரிஷீந்த்ர சேவி
தோத்பய பார்ஸ்வபூவே
நம
சதகோடி சூரத்ரனும்ருத
சங்கீதகௌஸ்துஸ்காயநம
சதகோடிந்த்ரதிக்பாலஹஸ்த
சாமரசேவிதாய நம
சதகோடி அகிலாண்டாதி
மகாப்ரமாண்ட நாயகாய
நம
சங்கபாணிவிதிப்யாம்சபார்
ஸ்வயோருப நேவிதாய
நம
சங்கபத்மநிதினும்ச கோடி
ப்பி பரிஜேவிதாய நம
சசாங்காதிதயகோடிவிஸவ்ய
தக்ஷிணசேவிதாய நம
சங்கபாலாத்யஷ்டநாககோடி
ப்பி பரிசேவிதாய நம
சசாங்கார பதங்காதி கிரக
நக்ஷத்ர சேவிதாய நம
சசிபாஸ்கர பௌமாதிக்
கிரஹதோஷார்த்தி பஞ்ச
நாய நம
சதபத்ரஞ்சயகராய நம
சதபத்ரார்ச்சனப்ரியாய நம
சதபத்ரசமாசியாய நம

ஓம் சதபத்ராசனஸ்த்துதாய நம
சரீரேப்ரம்மாமூலாதி சடா
தாரநிவாசகாய நம
சதபத்ரசமுத்பன்ன ப்ரம்ம
கெர்வவிவேதகாய நம
சசாங்காராத்தஜடா
சூடாய நம
சரணுகதவத்ஸலாய நம

ஓம் ஸ்ரீம் செளம்.

ஓம் ரகாரரூபாய நமஃ
ரமணுய நம
ராஜீவாக்ஷாய நம
ரகோகதாய நம
ரதீசகோடிசவுந்தர்யாய நம
ரவிகோடியுதயப்ரபாய நம
ராகஸ்வரூபாய நம
ராகக்யாணுய நம
ரத்தாஜப்ரியாய நம
ராஜேந்த்ரவிபவப்ரதாய நம
ரத்னப்ரபகிரீடாக்ணுய நம
ரவிசந்த்ராக்கினிலோசணுய
நம
ரத்ணுங்கதமகாபாகவே நம
ரத்னதாடங்கபூஷணுயநம
ரத்னகேயூர பூஷாட்டியாய
நம
ரத்னஹாரவிராஜிதாய நம
ரத்னகிங்கினி காந்தியாதி
வத்தசத்கடி சோபிதாய
நம
ரவசம்யுக்தரத்ணுபநூ புராங்
கிரிஸரோரூஹாய நம
ரத்னகங்கனசூடாதி சர்வா
பாணபூஷிதாய நம
ரத்னசிம்மாசணுசிநாய நம
ரத்னசோபிதமந்த்ராய நம
ராகேந்துமுகசகடாய நம

ஓம் ரமாவான்யாதிபூஜிதாய நம
ராக்ஷஸாமர ப்ருந்தைஸ்ச்ச
(?)கோடிகோட்டியாபி வந்தி
தாய நம
ரணரங்கேமஹாவைந்ய சங்
ராமஜயகெளதுகாய நம
ராக்ஷஸப்ருந்தசம்மார கோ
பாவேசர யுதாங்கிவதயே
நம
ராக்ஷஸாங்க சமுத்பன்னே
ரத்தபானப்ரீயா யுதாய
நம
ரவயுக்ததணுர்தராய நம
ரத்னகுக்குடதாரணுய நம
ரணரங்கஜயாய நம
ராமஸ்தோத்ரஸிரவனவைப
வாய நம
ரம்பாக்ருதாசு விஸ்வாசி
மேனகாத்தியபி வந்திதாய
நம
ரக்தபீதாம்பராதராய நம
ரக்தகெந்தாணுலேபணுய நம
ரக்தாஞ்சாதச பத்மாக்ஷாய
நம
ரக்தமால்யவிபூஷிதாய நம
ரவீப்ரியாய நம
ராவணேசத்ஸ்தோத்ர சாம
மணேகராய நம
ராஜ்யப்ரதாய நம
ரந்த்ரகுஹ்யாய நம
ரதிவல்லபசுப்ரீயாய நம
ரநாணுபங்கிர்முக்தாய நம
ராக்ஷசப்ருந்தவைரிகாய நம
ராஜீவசம்பவஞ் சேஷிணே
நம
ராஜீவோசனபூஜிதாய நம
ராணீயமஹாசித்ர மயூரா
ரூடசுந்தராயநம
ரமாநாதஸ்த்துதாய நம

ஓம் ராமாய நம
ராகாராகர்ஷணக்ரியாய நம

ஓம் ஸ்ரீம் சௌம்.

ஓம் வகாரரூபாய நம
வரதாய நம
வஜ்ரசக்த்யபயந்வதாய நம
வாமதேவாதி சம்பூஜியாய நம
வஜ்ரபாணி மனோஹராய நம
வாணிஸ்துதாய நம
வாஸவேஸாய நம
வல்லிகல்யாண சந்த்ராய நம
வல்லீவதன பத்மார்க்காய நம
வல்லீநேத்ரோத்பலோடுபாய நம
வல்லீஞ்சிநயநநந்தாய நம
வல்லீசித்தடாம்ருதாய நம
வல்லீகல்பலதா விருக்ஷாய நம
வல்லீப்ரியமனோஹராய நம
வல்லீபாஷிதசுப்ரீயாய நம
வல்லீமனோஹிருதஸ் தொந்தாய நம
வல்லீவித்யுல்லதாகநாய நம
வல்லீமங்கள வேஷாட்டியாய நம
வல்லீமுகவசீகராய நம
வல்லீகுஞ்சரிசஞ்ச குங்குமாங்கித வக்ஷஸே நம
வல்லீசாய நம
வல்லபாய நம
வாயுசாரதயே நம
வருணஸ்த்துதாய நம
வக்ரதுண்டாநுஜாய நம

ஓம் வத்ஸாய நம
வத்ஸலாய நம
வத்ஸரக்ஷகாய நம
வத்ஸப்ரீயாய நம
வத்ஸநாதாய நம
வத்ஸவீரகணவிருதாய நம
வாரணானநந்தைத்யக்யாஞய நம
வாதபியுபதேசகாய நம
வர்ணகாத்ர மயுரஸ்த்தாய நம
வர்ணரூபாய நம
வரப்ரபவே நம
வர்ணஸ்த்தாய நம
வாரணாரூடாய நம
வஜ்ரசக்தியாயுதப்ரியாய நம
வாமாங்காய நம
வாமநயநாய நம
வஸத்துபவே நம
வாமனப்ரீயாய நம
வரவேஷதராய நம
வாமனாய நம
வாச்சஸ்பதி சமர்ச்சிதாயநம
வசிஷ்டாதி முனிசிரேஷ்ட வந்திதாய நம
வந்தனப்ரீயாய நம
வகாரந்நிருபதேவஸதிசோரபதாரி மோஹதாய நம
ஓம் ஸ்ரீம் சௌம்.

ஓம் ணகாரரூபாய நம
நாதாந்தாய நம
நாதாந்தாதிமுனிஸத்துதாய நம
நகாரபிம்ம தயஸ்த்தாய நம
நகபேஷிணே நம
நகேஸ்வராய நம
நகாரநாத சந்துஷ்டாய நம
நாகாரநாதஸ்திதாய நம

ஓம் ணகாரஜபசுப்ரீதாய நம
நாநாவேஷாய நம
நகப்ரியாய நம
நகாரவிந்துநிலயாய நம
நவக்ரகஸ்வரூபகாய நம
நகாரபடனுநந்தாய நம
நந்திகேஸ்வரவந்திதாய நம
ணகாரகண்டாணிநதாய நம
நாராயணமனோஹராய நம
ணகாரநாதசிரவணாய நம
நளினோத்பவசிக்ஷகாய நம
ணகார பங்க ஜாதித்தியாய
நம
நவவீராதினயஸ்ய நம
ணகாரபுஷ்பப்ரம்மராய நம
நவரத்னவிபூஷணாய நம
ணகாரானர்க்கசயனாய நம
நவசக்திசமாவ்ருபியாய நம
ணகாரவிருக்ஷகுசுமாய நம
நாட்டியசங்கித சுப்ரீயாயநம
ணகாரபிந்துநாதக்ஞாய நம
நயக்ஞாய நம
நயனோத்பவாய நம
ணகாரபர்வதஸ்ருங்கச முத்
பன்ன சுதாரணயே நம
ணகாரபட்டகமணியே நம
நாகபர்வதமந்த்ராய நம
ணகாரகருணானந்தாய நம
நாதாத்மனே நம
நாகபூஷணாய நம
ணகாரகிங்கிணிபூஷாய நம
நயனத்ருஸ்யதர்ஸனாய நம
ணகாரவிருஷப ஸ்ருங்காய
நம
நாமபாராயணப்ரியாய நம
ணகாரகமலாரூடாய நம
நாமாநந்தசமங்கிவதாய நம
ணகாரதுரகாரூடாய நம.
நவரத்னதிதாயகாய நம

ஓம் ணகாரமகுடஜ்வாலாமணியே
நம
நவநிதிப்ரதாய நம
ணகாரமூலமந்த் ரோர்த்தாய
நம
நவசித்தாதிபூஜிதயே நம
ணகாரமூலநாதாந்தாய நம
ணகாரேஸ்த்தம் பனக்ரீயாய
நம

ஓம் ஸ்ரீம் சௌம்

பகாரரூபாய நம
பக்தார்த்ததாய நம
பவாய நம
பர்க்காய நம
பயாபகாய நம
பக்தப்ரியாய நம
பக்தவந்த்யாய நம
பகவதே நம
பக்தவத்ஸலாய நம
பக்தார்த்திபஞ்சநாய நம
பத்ராய நம
பக்தசௌபாக்கிய தாயகாய
நம
பக்தமங்களதாத்ரே நம
பக்தகல்யாணதாசனாய நம
பக்ததர்ஸனசந்துஷ்டாய நம
பக்தசங்கசுபூஜிதாய நம
பக்தஸ்தோத்ர ப்ரியாநந்த
னாய நம
பக்தாபீஷ்டப்ரதாயகாய நம
பக்தசம்பூர்ணப்லதாய நம
பக்தசாம்ராஜ்யபோகதாய
நம
பக்தசாலோக்கிய சாமீப்ய
ரூபமோக்ஷ வரப்ரதாய
நம
பவௌஷதாய நம
பவக்நாய நம

ஓம் பவாரண்யதவானலய நம
பவாப்தகார மார்த்தாண்டாய நம
பவைத்தியாய நம
பவாயுதாய நம
பவசைலமகாவஜ்ஜிராய நம
பவசாகரநாவிதாய நம
பவமிருத்தியுபவதுவம்ஸினே நம
பாவனதீதவிக்கிரஹாய நம
பயபூதபிசாசக்நாய நம
பாசுவராய நம
பாரதிப்ரியாய நம
பாஷிதத்தவ நிமூலாந்தாய நம
பாவாபாவவிவர்ஜிதாய நம
பானுகோபபித்ருதுவம்ஸினே நம
பாரதிசோபதேசகாய நம
பார்க்கவிநாயகஸ்ய ஸ்ரீபாகினேயாய நம
பவோத்பவாய நம
பாரக்ரௌஞ்சரசுரஞ்சேஷாய நம
பார்க்கவிநாதவல்லபாய நம
படவீரநமசிருவத்யாய நம
படவீரஸமாவிருதாய நம
படதாரகனசந்த்ராய நம
படவீரகணஸ்துதாய நம
பாகீரதியாய நம
பாஷார்த்தாய நம
பாவமந்த்ரஜபப்ரீயாய நம
பகாரேகலிசோராரி பூதாத்துயுச்சாட்டனேத்யதாய நம

ஓம் ஸ்ரீம் சௌம்

வகாரவிகலஸடஸ்தாய நம
வரிஷ்டாய நம

ஓம் வசுதாயகாய நம
வகாரகுமுதேந்தவே நம
வகாராபிதசுதாமயாய நம
வகாராம்ருததாயகாய நம
வச்ராபீதிதக்ஷஹஸ்தாய நம
வாமேசக்திவராங்கிவதாய நம
வகாரோததி பூர்ணேந்தவே நம
வகாரோததி மௌத்திகாய நம
வகாரமேகசலிலாய நம
வாசவாத்மஜாக்ஷகாய நம
வகாரபலசாரக்ஞாய நம
வகாரகலசாம்ருதாய நம
வகாரபங்கஜமதுநே நம
வசவே நம
வம்சவிவர்த்தநாய நம
வகாரதிவ்யகுசுமப்ரம்மராய நம
வாயுவந்திதாய நம
வகாரசஸிஸம்காசாய நம
வச்ரபாணிசுதாப்ரியாயநம
வகாரபுஷ்பசத்கந்தாயநம
வகாரதடபங்கஜாய நம
வகாரப்ரம்மரத்தா வனய நம
வயஸ்தேஜோபலப்ரதாய நம
வகாரவநிதாநாதாய நம
வஸ்யாத்யஷ்டக்ரியரப்ரதாய நம
வாகபலஸஸ்த்ராய நம
வகாராச்சிய ஹ▭தாஸனய நம
வர்ச்சஸ்விநே நம
வாக்மனோதீதாய நம
வாதாபிதாபனப்ரியாய நம
வகாரவட்டமூலஸ்தாயு நம

ஓம் வகாராரண்யஸ்தடாய நம
வகாரகங்காவேகப்தயேநம
வச்சிரமாணிச்ய பூஷிணுய நம
வாதரோகஹராய நம
வாணீகிதசிரவண கௌஸ்துதாய நம
வகாரமகாரரூடாய நம
வகாரஜலதிபதையே நம
வகாராமலமந்த்ரந்தாய நம
வகாரகிரக மங்களாய நம
வகாரசொர்க்கமாகேந்த்ராய நம
வகாராரண்யவாரணுய நம
வகாரகல்பசுகாய நம
வலாரிதநயனுஸ்துதாய நம
வகாரமந்த்ரமலயபர்வதமந்தமாருதாய நம
ஓம் வாத்தியத்தம் பாத்தஷட்கரம்மியஜபாந்தோ சத்ருபஞ்சநாய நம
வச்சிரஹஸ்த சுதாவல்லிவாமதக்ஷிணசேவிதாய நம
வகுலோத்பலகாரம் பபுஷ்பதாமத்தியலங்ருதாய நம
வச்ரசக்தியாதி சம்பண்ணஞ்சிஷ்டபாணி சரோருஹாய நம
வாஸநாகெந்தலிக்தாங்காய நம
வஷட்கராய நம
வசீகராய நம
வாசனுயுக்ததாம்பூல பூரிபூரிதானசுந்த்ராய நம
வல்லவாநாதஸம்ப்ரீதாய நம
வரபூர்ணும்ருததோதயே நம

சுப்ரமண்ய நாமதிரிசதி நாமாவளி முற்றிற்று.

---

## சுப்ரமண்ய திரிசதி நாமாவளி

### கரந்நியாஸம்.

ஸ்ரீ சுப்ரமண்ய ப்ரசாத சித்பர்த்தே ஜபேவிநியோக:, ஓம் ஸம் ஓங்கார சொரூபாயா ஓஜோதராய ஓஜஸ்விநே நமஸ்வம் சிருதாய இஷ்ட சித்தார்த்மனே பாஸ்வரரூபாய அங்குஷ்டாப்யாம் நம:, ரம் ஷட் கோணமத்திய நிலேயாய ஷட்க்ரீடதராய ஸ்ரீமதே சடாதராய தர்ஜனிப்யாம் நம:, ஹம் ஷண்முக சரஜன்மனே சுபலக்ஷணுய சிகிவாகனுய மத்ய மாப்யாம் நம:, ணம் க்ருசானு சம்பவாய கவசனே குக்குடத்வஜாய அநாமிகாப்யாம் நம:, பம் கந்தர்ப்பகோடி திவ்யமாணுய திவிஷட்பாஹவே துவாத சாக்ஷாய கனிஷ்ட காப்யாம்நம:, வம் கேடதராய கட்கனே சக்தி ஹஸ் தாய கரதல கரப்ருஷ்ட்டாப்யாமு நமு:

## அங்கந்நியாசம்.

ஓம் ஸம் ஓங்கார ஸ்வரூபாய ஓஜோதராய ஓஜஸ்விநே நம:, வம் விர்த்தியாய இஷ்ட சித்தார்த்தமனே பாஸவரூபாய ஹிருதாயாய நம:, ரம் ஷட் கோணமத்ய நிலயாய ஷட்க்ரீடதாராய ஸ்ரீமதே ஷடாதாராய சிரஸேஸ்வாஹா, ஷண்முக சரஜன்மனே சுபலக்ஷணய சிகிவாகனுப சிகாய வெளஷட், ணம் க்ருசானு சம்பவாய கவசினே குக்குடத்துவஜாய கவசாய ஹூம், பம் கந்தர்ப்பகோடி திவ்யமானுப திவிஷட்பாகவே துவாத சாக்ஷாய நேத்ரத்ரயாய வஷட்வம், கேடதராய கட்கினே சந்தியஸ்தாய ஹஸ்த்ராய பட் ஓம் ப்பூர்ப்பூ பூவஸ்வரோ மிதி திக் பந்த:

## த்யானம்.

த்யாயே ஷண்முக மிந்துகோடி சத்து சம்ரத்னப்ரபா சோபிதம் பாலர் கத்யுதி ஷட்க்ரீட விலசத்கேயூர ஹாராரண்விதம் கர்ணலம்பித குண்டலப்ரவில கற்கண்ட ஸ்த்தவா சோபிதம் கிஞ்சித் கங்கண கிங்கிணிரவயுதம் ஸ்ருங்கார சாரோதயம்.

---

# சடாக்ஷர மாறல்.

---

## விநாயகர் காப்பு.

வெண்பா.

சத்தி விநாயகனைத் தந்தையெனத் தான்கொண்ட
சித்தி விநாயகனைச் சிந்தித்து—நித்தஞ்
சடாட்சர மாறலினைச் சாற்றிவர நம்மேற்
கடாட்சம்வைத் தாளுவான் காண்.

நாலு மறையும் புகழ்
மாலு மயனும் பணி
மேலு மரனுஞ் சொலும்
வேலு மயிலுந் துணை.

## வ சி ய ம்.

சரஹணபவஹ்ரீங்-சங்கரியீன்ற
சண்முகறிங்-ஓங்கார
சமயகாருண்யத் தலைவனே முருக
தந்தியின்சுழி திரிகோணச்
சரஹணபவனுனைச் சகலருந்துதிக்கச்
சரியையுங் கிரியையுஞானச்
சதங்கைபொற்றுளிற் கலீரெனமயின்மேற்
றுலிமாசத்திவேற் றுங்கிச்
சரஹணபவவிச் சமயநீவந்துன்
சவ்-ரவ்-ஹவ்-ணவ்-பவ்-வவ்
சங்-கிலியு-ஐயும் ஓவெனவசியஞ்
சாற்றவல்பில்லி சூனியம்போய்
சகலமுமாடத் தலைவிரித்தோடச்
சங்-றிங்-வங்-கெனவாடச்
சரணமாமென்முன் னேடிவந்தருள்வாய்
சண்முகா சரஹணபவனே 1



மூல மந்திரம்.

ஓம்-றீம்-ஐயும்-கிலியும்-ஔம்-சௌம்.

சரஹணபவ.

இந்தச் சக்கரத்தை வில்வப் பலகையில் வரைந்து, எழுதுகளை யடைத்து, கலை ஆசனத்தில் கிழக்குமுகமாக யிருந்து பூசித்து உருத்திராட்சத் தாழ்வடத்தால் ஆதிவாரந்தொடங்கி 1008-உருவேற்றச் சித்தியாகும்.

## ஆக்ருஷணம்.

ரஹணபவசவென் றடிக்கடிதுதிக்க
ராட்சசக்கணமுதலொடுங்கி
ரவிதனைக்கண்ட பனியதுபோலாம்
ரங்-கெனப்பிணிபல வடங்கும்
ரஹணபவச வென்னநாவுரைக்கி
னற்றவப்பேறு பாக்கியமாம்
வலி-லிலி-லுலு-வென்-றகத்தினிற்செபிக்க
நானிலந்தொழுவங்-சிங்கென்ன
ரஹணபவச-ஹங்-சிங்-வங் கென்னி
னமனணுகானய னேழுதாண்
நமநமசிவய-நம்-மெனப்பீடை
களிர்மதிகண்ட ராப்போலாம்
ரஹணபவச-வெனும்-பொருட் பொதிகை
நாதனுக்கோதிய குருவே
ரஞ்சிதக்குறமா வஞ்சிகாதலனே
ரஹணபவச நாயகனே. 2




மூல மந்திரம்.

றீம்-ஐயும்-கிலியும்-ஔம்-சௌம்-ஓம்.

ரஹணபவச.

இந்தச் சக்கரத்தை வெண்ணுவற் பலகையிற் வரைந்து, எழுத்துகளையடைத்து, பட்டு ஆசனத்தில் ஈசான திசைமுகமாக விருந்து பூசித்து, ஸ்படிகத் தாழ்வடத்தால் குருவாரந்தொடங்கி 1008-உருவேற்றச் சித்தியாகும்.

# மோகனம்.

ஹணபவசரவென் றரியரனயன்மால்
அமரர்மாதவர்களுந் துதிக்க
ஹய்யுடன்றீயுங்-கிலி-ஹரி-சவ்வும்
ஐம்பத்தோ ரக்ஷரமுதலாம்
ஹணபவசரவென்-றடிக்கடிக் கோதும்
அடியவர்க்கருள்செய்யும் பொருளே
ஹரி-நமசிவய-வென்றுடல்மறைந்துங்
அங்-சிங்-வங்-கென மோனம்
ஹணபவசர-ஆ-ஈ-ஊ-ஏ-ஓ
அம்மெனுமட்சரஞ் செபிக்க
ஹண்டமெண்டிசையுஞ் சராசரபிண்டம்
அக்கினி ரோதியதாகி
ஹணபவசரவென் ருய்ந்திடச்சத்தி
ஆதியோடு வந்தருள்புரியும்
ஆறுமாமுகவென் குறைதவிர்த்தாள்வாய்
ஹணபவசர பிரணவனே. 3



மூல மந்திரம்.

ஐயும்-கிலியும்-ஔம்-சௌம்-ஓம்-றீம்.

ஹணபவசர.

இந்தச்சக்கரத்தை அலரிப்பலகையில் வரைந்து எழுத்துகளை யடைத்து, புலி ஆசனத்தில் வடக்கு முகமாக விருந்து பூசித்து, மிளகு தாழ்வடத்தால் சோமவாரந்தொடங்கி 1008-உரு வேற்றச் சித்தியாகும்.

## தம்பனம்.

ணபவசரஹ-வென்றுவோத
ஞானமுங்கல்வியும் பெருகும்
நங்கெனமோக யோகபோகமுமாம்
நமசிவயன வெனத்துதித்தால்
நாற்பத்திரண்டு கோணயந்திரமும்
நடுக்கமாம்-நங் றீங்-இங்-ரீங்
நங்-உங்-டங்-மங்-சிங்-வங்-கென்றபடி
நல்லுருப்போட தம்பனமாம்
ணபவசரஹவென வுற்றெழுநோய்கள்
நாவின்றழும்பு சோகையும்போம்
களிர்சுரம்வாந்தி பௌத்திரமூலம்
ரத்தநோய்மூர்ச்சை பாழ்ப்பிளவை
நடுக்கமாமிடுக்கண் கிரந்திதேன்மேக
நதிபெருக்கிளை வல்லிருமல்
நாடிடாதோடுங் குன்றுதோறுடும்
ணபவசரஹ நற்பொருளே 4




### மூல மந்திரம்.

கிலியும்-ஔம்-சௌம்-ஓம் றீம்-ஐயும்.

ணபவசரஹ.

இந்தச் சக்கரத்தை ஆலம் பலகையில் வரைந்து, எழுத்துக்களை யடைத்து, தர்ப்பாசனத்தில் நிருதிதிசை முகமாக விருந்து பூசித்து, தாமரைமணித் தாழ்வடத்தால் அங்காரக வாரந்தொடங்கி 1008-உருவேற்றச் சித்தியாகும்.

# உச்சாடனம்

பவசரஹணநின் பரமெனுமடியார்
பவங்கெடச் சுகந்தருமணியே
பராபரிஐயும்-கிரி-ஹரி-சவ்வும்
பங்-றீங்-ஓமெனுமகார
பவசரஹணவென் றுனைத்தொழுமுத்தி
பலித்திடுஞ் சத்தியாம்வெற்றி
பரைபரிபாலை திரிபுரைபுவனை
பகர்நமசி வயவாம்பேறும்
பவசரஹணவென் றோதமாமயின்மேற்
பரிந்தெழுந் தபயமென்றருளிப்
பசிப்பிணிகடனோய் விடபயமுதுமை
படிற்றுறை கடையவர்நெஞ்சம்
பாரமூவாசை-டங் டிங்கென்னப்
படுவினை பூதவேதாளப்
பகைதவிர்த்தாள்வாய் பவசரஹணநின்
பாதமேகதி குருபரனே. 5



மூல மந்திரம்.

ஔம்-சௌம்-ஓம்-றீம்-ஐயும்-கிலியும்.

பவசரஹண.

இந்தச் சக்கரத்தை பலாப்பலகையில் வரைந்து, எழுத்துகளை யடைத்து, சித்திராசனத்தில் வாயுதிசை முகமாக விருந்து பூசித்து சிந்தில்மாலைத் தாழ்வடத்தால் புதவாரந் தொடங்கி 1008-உருவேற்றச் சித்தியாகும்.

## மாரணம்.

வசரஹணப-வெனச்செபித்திடவும்
வருசரக்ஷண பவவெனவும்
வனசபூம்பதமு மகரகுண்டலமும்
வயங்குமா மகுடமுஞ்சிரமும்
வச்சிராங்கியுமேற் கடககங்கணமும்
வரிவிழிக் கருணையும்வேலும்
வாணருக்குதவுஞ் சேவலுமயிலும்
வள்ளிதெய் வானையுடனே
வாஞ்சையாற்கண்டு மகிழ்ந்திடக்கொடியோன்
வாழ்த்துமிச்சடா க்ஷரமாரம்
வச்சிரக்கல்லு மணிச்சிறுபாலும்
மகிழ்ந்திடுஞ் செட்டிமாமகனே
வறியனுக்குதவு காட்சியும்வாழ்வும்
வளர்ந்திட வட்டமிட்டவர்க்கு
வலிவுநற்றேக யோகபாக்கியமும்
மருதளித்தருள் சடாட்சரனே. 6



மூல மந்திரம்.

சௌம்-ஓம்-றீயும்-கிலியும்-ஔம்.

வசரஹணபவ.

இந்தச் சக்கரத்தை அத்திப் பலகையில் வரைந்து, எழுத்து களை யடைத்து, வேங்கை ஆசனத்தில் அக்கினிதிசை முகமாகவிரு ந்து பூசித்து நாபிமணித் தாழ்வடத்தால் சனிவாரந் தொடங்கி 1008-உருவேற்றச் சித்தியாகும்.

# சமுதாயமாறல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | ர | ஹ | ண | ப | வ |
| ர | ஹ | ண | ப | வ | ச |
| ஹ | ண | ப | வ | ச | ர |
| ண | ப | வ | ச | ர | ஹ |
| ப | வ | ச | ர | ஹ | ண |
| வ | ச | ர | ஹ | ண | ப |

இந்த சக்கரத்தை வெள்ளி அல்லது தங்கரேக்கில் வரைந்து எழுத்துக்களை யடைத்து, பதுமாசனத்தில் கிழக்குமுகமாக விருந்து பூசித்து, உருத்திராட்சத் தாழ்வடத்தால் 1008-உரு தினம் ஏற்றச் சர்வ காரியமுஞ் சித்தியாகும்.

உ

சிவமயம்.

# கந்தர் கவசம்.

காப்பு.

அமரர் துயர்தீர வன்று பொருத
குமரனடிப் போதிணையே கூறு.

ஆசிரியப்பா.

சரவண பவகுக சண்முக முருக
சுரமக டழுவிய சுந்தர முருக
கருக்குழி தனில்விழார் கண்டு மகிழத்
திருப்பரங் குன்றிற் றிகழ்ந்தருண் முருக
மந்திர முனிவோர் வந்து வழிபடச்
செந்தி னகரிற் சேர்ந்தருண் முருக
காவியுந் தண்டுங் கண்டோர் பரவ
ஆவினன் குடியி லடைந்தருண் முருக
நீரகத் தோர்க ணித்தலுந் தொழுதெழ
ஏரக வேற்பி லெழுந்தருண் முருக
வந்த மாதவர் வகைவகை துதிசெயக்
கந்தமா தனத்திற் கலந்தருண் முருக
அயிலைப் பொருவிழி யரம்பைகள் பரவக்
கயிலைச் சிலம்பிற் கமழ்ந்தருண் முருக
கருமலை பொடிபடக் கண்டவர் சூழத்
திருமலை யதனிற் சிறந்தருண் முருக
வேங்கை யுடைவனை வேதியர் துதிக்க
வேங்கட கிரிவயின் விரைந்தருண் முருக
பணியணி பரசிவன் பழமறைப் பொருள்பெறத்
தணிகையங் குவட்டிற் றழைத்தருண் முருக
நள்ளிரு டன்னி னுச்சியார் நலமுற
வள்ளி மலையில் வாழ்ந்தருண் முருக

கன்றுல் விளவெறி கண்ணன் சிவமுறக்
குன்றத் தூரிற் குளிர்ந்தருண் முருக
இழுக்கண் டாத்தவ ரிருந்தரு ளணிபெறக்
கழுக்குன் றிடத்திற் கனிந்தருண் முருக
சூறை யாம்புலன் சுழல்வழிப் படார்தொழப்
பேறை மலையிற் பீடருண் முருக
குயிலா மெனுமொழிக் குஞ்சரி மகிழ்வுற
மயிலா சலத்தில் மகிழ்ந்தருண் முருக
துரிசுறுத் தவர்பலர் தூநல மடைவான்
திரிசிரா மலையிற் றிகழ்தருண் முருக
பொற்புரி யவர்நலம் பொருந்திப் பிழைக்க‌க்
கற்குடி யகத்திற் கவின்பெறு முருக
சிரத்தை யுடன்பணி சீரியோ ரழகுற
இரத்தின கிரியி லிருந்தருண் முருக
இராத விடையவ ரிருபுற மருவ
விராலி மலையில் விரைந்தருண் முருக
அநாதி யாகிய வமலன் றுதிசெய
விநாயக மலையில் விருப்பருண் முருக
கொங்கோ டலர்தொடு குரவ ரணிபெறச்
செங்கோ டதனிற் சேர்ந்தருண் முருக
கல்வி விழைகுநர் கலந்து வழிபடக்
கொல்லி மலையிற் குறைந்தருண் முருக
ஏன மாகிய விறையவன் பதம்பெற
ஞான மலையி னயந்தருண் முருக
ஒப்புயர் வில்லா வொருவ னருளுறச்
செப்பு வெற்பிற் செழித்தருண் முருக
இருடிக டவ்வினை யிளைப்புறு வண்ணங்
குருடி மலையிற் குறித்தருண் முருக
எங்குள பொருளு மேற்பவர் பெற்றுயக்
கொங்கண கிரியிற் கூர்ந்தருண் முருக
இங்குணம் பெரிதே யிறைமக னுயிர்பெறக்
கொடுங்குன் றதனிற் குனித்தருண் முருக
பன்றிக் கன்றருள் பரன்பிர ணவம்பெறக்
குன்றக் குடியிற் கொடுத்தருண் முருக
வசுக்கள் வழியுற வந்து பராவிடப்
பசுமலை யிடத்திற் பதிந்தருண் முருக

நதியணி யரனிகர் நற்றமிழ் முனிபெறப்
　　பொதிகை மலையிற் புகழ்ந்தருண் முருக
அழகிய பாண்டிய னடியிணை பெற்றுயக்
　　கழுகு மலையிற் கவிந்தருண் முருக
துள்ளிய வினையிற் றொடக்குறூர் பரவ
　　வள்ளி யூரில் வதிந்தருண் முருக
எதிரறு தவத்தோ ரிடருறு வண்ணங்
　　கதிர்கா மத்திற் கசிந்தருண் முருக
கழைமலர் பிடிமதன் கவின்பெறப் போற்றப்
　　பழமுதிர் சோலையிற் பதிந்தருண் முருக
வருக முருக வருக முருக
　　கருணை யுடனே கண்ணெதிர் நன்கு
ஆறுமுகமு மழகிய முடியும்
　　நீறு புனைந்த நிகரறு நெற்றியும்
புகலுறு புருவமும் புனைந்த சுட்டியும்
　　மகர குண்டல மாட்டிய செவியும்
கண்டிகை பூண்ட கவின்பெறு களமும்
　　விண்டிகை மதிக்க விளங்குறு மார்பும்
பன்னிரு தோளும் பவள வாயுங்
　　கன்னிய ரிருவர் கலந்த கோலமும்
அபய வரதமு மயிலு மயிலுஞ்
　　சுப ருள் பங்கய சுந்தர வடிவும்
கோழிக் கொடியுங் கூர்நவ வரரும்
　　வாழி மொழிபகர் வானவர் குழுவும்
தோற்ற வடிமைமுன் சொகுசுடன் வந்து
　　மாற்றார் தம்மை வதைத்தருண் முருக
ஓம்வசிய வசிய ஓங்கார முருக
　　ஸ்ரீம்ஹரீங் சிவசிவ ஸ்ரீங்கார முருக
சம்சிங் சரஹண பவவோம் முருக
　　ரம்ரங் சஹணப வசஐயும் முருக
ஹம்உங் ஹணபவ சரக்லீயும் முருக
　　ணம்ணங் ணபவச ரஹசெளவும் முருக
பம்பங் பவசர ஹணஹிறீயும் முருக
　　வம்வங் வசரஹ ணபஸ்ரீயும் முருக
சிவசிவ சிவசிவ சிவாய நமஹ
　　சங்கர சங்கர சயிலொளி பவாய
ஓம்திரி புரபவ ஓம்திக ழொளிபவ
　　ஓம்பரி புரபவ ஓம்பவ னொளிபவ

ஓம்குரு பரபவ ஓம்குக ஞௌிபவ
ஓம்சிவ சரபவ ஓம்சிகா ராநம
ஓம்ஆம் கிறியும் ஓம்கிலி ஐயும்
ஆம்ஓம் அவ்வும் அம்சிவா யநம
ஊம்ஆம் கிலியும் சவ்கிறியு மிறீயும்
ஓம்இறியும் கிறியும் சவ்கிறி ஐயும்
ஆன முருக வழகிய முருக
வான முருக வரமருண் முருக
அல்லலாந் தொழிலை யகற்றிடு முருக
பில்லி சூனியம் பெயர்த்தெறி முருக
கட்டமாம் வினையைக் களைந்தெறி முருக
குட்டிமோ கினியைக் குலைத்திடு முருக
கறுப்பனை வீரனைக் களைந்திடு முருக
குறிபகர் மாடனைக் கொளுத்திடு முருக
இடாகினி தன்னை யிழுத்தெறி முருக
அடாத குறளியை யடக்கிடு முருக
கொள்ளிவாய்ப் பேயைக் குலைத்திடு முருக
நள்ளிருண் முனியை நசித்திடு முருக
துஷ்டதே வதையைத் துரத்திடு முருக
அஷ்டமா சித்தியை யருள்செய முருக
தலைவலி யதனைத் தவிர்த்திடு முருக
கலைவலி யதனைக் கவித்திடு முருக
மூல மதனை முறித்திடு முருக
சூலை யதனைச் சுழற்றிடு முருக
கண்ணோ யதனைக் களைந்திடு முருக
மண்ணோ யதனை மறித்திடு முருக
குன்ம மதனைக் குலைத்திடு முருக
சென்ம வினையைத் திருப்பிடு முருக
ஏறிய விஷத்தை யிறக்கிடு முருக
சீறிய மாவைச் சிதைத்திடு முருக
பூக்கமழ் குஞ்சிமுற் புகலு முறுப்பைக்
காக்க முருக காக்க முருக
வாழி முருக வாழி முருக
வாழி முருக வாழி முருக
முருக முருக முருக முருக
முருக முருக முருக முருகனே.

கந்தர் கவசம் முற்றியது.

---

உ

சிவமயம்.

தேவராய சுவாமிகள் அருளிச்செய்த

# கந்தர் சஷ்டிக் கவசம்.

## காப்பு.

நேரிசை வெண்பா.

துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போ நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பாலித்துக்—கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடு நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

அமரரிடர்தீர அமரம்புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரஹண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயு மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா யெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமக ணினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐய வருக
நீறிடும் வேலவ னித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி

விணபவசரஹ வீரா நமோ நமோ
நிபவ சரஹண நிறநிற நிறெண
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னையாளும் இளையோன் கையிற்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியி னவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ந மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்நம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்குடிங் குகுகு
விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேண் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவி நோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினை காக்க
விதிசெவி யிரண்டு வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ந வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேற் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அணிவேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டு முரண்வேல் காக்க

பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமல நல்வேல் காக்க
முப்பா லுடிடை முனைவேல் காக்க
எப்பொழுதும் மெனை யெதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வயிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க அடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புறக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியினைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துணைச் சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட

காலதூத ரெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலரி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியு நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடாந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுகன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேள் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத் துறை கதிர்வேள் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைம கணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
என்னைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியி லணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்த னென்மீது மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் கஷ்டி கவசம் விரும்பிய
பாலன் றேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையிற் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுட னொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்

ஒருநாண் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித் துகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலேங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்னற துள்ள
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்ய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரஹண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்.

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.

உ

கணபதி துணை.

# கந்தாநுபூதி.

காப்பு.

## விபூதி தியானம்.

### சந்தக் கலி விருத்தம்.

நெஞ்சக் கனகல் லுநெகிழந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

நிவேதனம்:—பால், பழம், சர்க்கரை, தாம்பூலம் உரு-100.

## நூல்.

மதயானை அநுசரிக்க.

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே

பால், பழம், சர்க்கரை, தாம்பூலம், உரு-108.

வணங்காரைத் தண்டிக்க.

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
வெல்லா மறவென் னையிழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

பச்சரிசி, வெல்லம், தாம்பூலம், உரு-1088.

கல்வியின் மெச்ச.

வானோ புனல்பார் கனன்மா ருதமோ
ஞானோ தயமோ நவினுன் மறையோ
யானோ மனமோ வெனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே.

தேங்காய் பால், பழம், கடலை, தாம்பூலம், உரு-1008

துறவு பெற.

வளைபட் டகைமா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே.

பால், பழம், பலாச்சுளை, சர்க்கரை, பொங்கல், பரமான்னம், உரு-1008.

மாயையை ஒழிக்க.

மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
யகமா டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுணின் றுதயங் குவதே.

பழம்-25, நெய்விளக்கு-30, தாம்பூலம்-50, தேங்காய், செவ்வலரி, உரு-108.

மாதரைத் தழுவ.

தினியா னமனோ சிலைமீ துனதா
ளணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள்ளி பதம் பணியுந்
தணியா வதிமோக தயா பரனே.

பால், பொங்கல், தேங்காய், பழம், சர்க்கரை, தாம்பூலம், உரு-1008.

தீராப்பிணி தீர.

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதா ணினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

பரமான்னம், பானகம், தாம்பூலம், உரு-1008.

குடிகளைத் தன் வசமாக்க.

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே.

தேங்காய், பழம், தாம்பூலம், உரு-104.

பெண்ணாசை ஒழிக்க.

மட்டூர் குழன்மங் கையர்மை யல்வலைப்
பட்டு சல்படும் பரிசென் றொழிவேன்
தட்டு டறவேல் சைலத் தெறியும்
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே.

தேங்காய், சர்க்கரை, இளநீர், வாழைப்பழம், தாம்பூலம், உரு-104.

நமனை விலக்க.

கார்மா மிசைக்கா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படிவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

பரமான்னம், பால், தாம்பூலம், உரு-1008

தளிகை சேர்க்க.

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள் பேசியவா
நாகா சலவே லவநா லுகவித்
த்யாகா சுரலோ கசிகா மணியே.

தேன், சர்க்கரை, பால், பழம், தேங்காய், உரு-1008.

களவு வெல்ல.

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
யம்மா பொருளொன் றுமறிந் திலனே.

பச்சரிசி, வெல்லம், தாம்பூலம், உரு-1008.

இருள்வழி நடக்க.

முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
வுருமன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.

வடை, பழம், தேங்காய், வெல்லம், தாம்பூலம், உரு-108

பாததரிசனஞ் செய்ய

கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியா
மையாய் வழிசெல் லுமவா வினையே.

பருப்பு, நெய், பாயசம், அன்னம், கறி, தாம்பூலம், உரு-1008

அஷ்டவதானஞ் செய்ய.

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயறந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரணே.

சர்க்கரை, பழம், பாற்பொங்கல், உரு-108.

பேராசை விலக்க.

பேராசை யெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோ கதுரந் தரனே.

சர்க்கரைப்பொங்கல், பழம், தேங்காய், தாம்பூலம், உரு-1008

தன்னடத்தை மேன்மையாக.

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன்ம யல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே.

பழம், தாம்பூலம், நெய்விளக்கு-100, தயிரன்னம், பலகாரம் உரு-108.

கற்பழியாதிருக்க.

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
வதிகா வநகா வபயா வமரா
வதிகா வலசூ ரபயங் கரனே.

மாவிளக்கு, தேங்காய், பழம், தாம்பூலம், உரு-108.

இல்வாழ்க்கை நீக்க.

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
வடியந் தமிலா வயில்வே லரசே
மிடியென் றொருபா விவெளிப் படினே.

தேங்காய், பழம், தாம்பூலம், உரு-108.

அநுக்கிரகம் பெற.

அரிதாகிய மெய்ப் பொருளுக் கடியே
னுரிதா வுபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந்தரனே.

பாற்பொங்கல், பழம், தாம்பூலம், செவ்வந்திப்பூ, உரு-108.

திருவடி வணங்க.

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில் வாகனனே
விரதா சுரசூ ரவிபா டனனே.

பால், பழம், தேங்காய், தாம்பூலம், உரு-180.

தவம் பெற.

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியதா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமேரு வையே.

பால், பழம், தேங்காய், தாம்பூலம், உரு-108.

சலிகை சொல்ல.

அடியைக் குறியா தறியாமை யினுன்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேள் பகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூதரனே.

அதிரசம், பரமான்னம், பாற்பொங்கல், உரு-1008,

மாதர்வலையல் அகப்படாதிருக்க.

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ
சூர்வே ரொடுகுன் றுதொளைத்த நெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே.

நெய், பழம், பரமான்னம், தாம்பூலம், உரு-1008.

மகாவினை ஒழிக்க.

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ வடியே னலையத் தகுமோ
கையோ வயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே.

பச்சரிசி, பொங்கல், தேங்காய், பழம், தாம்பூலம், உரு-108.

யாருமற்றபேர்க்கு ஆதாரமாக.

ஆதார மிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவிநோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே.

கந்தம், புஷ்பம், சர்க்கரைப்பொங்கல், தாம்பூலம், உரு-108.

பாக்கியத்தை விதிவழி அநுபவிக்க.

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயா
னென்னே விதிலன் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே.

பணியாரம், தேங்காய், பழம், தாம்பூலம் உரு-108.

தான் அவனாக.

ஆனா வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங்கி வெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே.

பச்சரிசி, பொங்கல், தேங்காய், பழம் உரு-108.

கடவுள்முன் கோபமாற்ற.

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொருத் திலையே
லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே.

ல், பொங்கல், தாம்பூலம் உரு-108.

வழக்குப் பேச.

சவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றெவ்வா ததென வுணர்வித் ததுதா
வ்வா றறிவா ரறிகின் றதலா
லெவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே.

தங்காய், பழம், தாம்பூலம் உரு-108.

கடவுள் முன்னிலையில் ஞானம்பெற.

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே.

பச்சரிசி, சர்க்கரை, பழம், தேங்காய், தாம்பூலம் உரு-1100

கொலை மறுக்க.

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா கையனே.

பச்சரிசியடை, சர்க்கரை, தாம்பூலம், உரு-108.

வியாகுலம் ஒழிக்க.

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே.

அடை, பணியாரம், தேங்காய், தாம்பூலம் உரு-108.

பெண்களைத் தாயாக நினைக்க.

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்க்ரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபா லக்ருப்ர கரனே.

நெல், மா விளக்கு, நெய், தேங்காய், பழம், தாம்பூலம், உரு-108.

சரீரவாஞ்சை ஒழிக்க.

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணவலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
றுதியா விரதா சுரபூ பதியே.

பரமான்னம், தாம்பூலம், பழம், உரு-1008.

கடவுளைக் காண.

நாதா குமரா நமவென் றரனு
ரோதா யெனவோ தியதெப் பொருடான்
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே.

தேன், சர்க்கரை, தேங்காய், பழம், தாம்பூலம், உரு 1008.

தனது அகந்தையை ஒழிக்க.

கிரிவாய் விடுவிக் ரமவே ளிமையோர்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவா
லரிவா யடியோ டுமகந் தையையே.

சர்க்கரைப்பொங்கல், பால், பழம், தாம்பூலம், உரு-108.

பிசாசம் ஒழிக்க.

ஆதாளி யையொன் றறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளதிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே.

மாவிளக்கு, பழம், தேங்காய், தாம்பூலம், உரு-108.

### ஜனனம் எடாதிருக்க.

மாவேழ் ஜனனங் கெடமா யைவிடா
மூவே டனையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே.

கனிவர்க்கம், பால், தாம்பூலம், உரு-108.

### மாயை தெளிய.

வினையோ டவிடுங் கதிர்வேன் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே.

வடை, தோசை, பணியாரம், உரு-1008.

### நித்தியதேகம் பெற.

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னோபதே சிகனே.

பால், பழம், தேங்காய், இளநீர், பரமான்னம், உரு-1008.

### நின்றநிலை நிற்க.

குறியைக் குறியா துகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே.

பசுநெய், தாமரைநூல், மாவிளக்கு, உரு-108.

### ஆசாநுகி அநுக்கிரகிக்க.

தூசா மணியுந் துகிலும் புனைவா
ணேசா முருகா நினதன் பருளா
லாசா நிகளந் துகளா யினபின்
பேசா வநுபூ திபிறந் ததுவே.

திருமாவிளக்கு, பழம், தேங்காய், தாம்பூலம், உரு-1008.

குருமந்திரம் பெற.

சாடுந் தனிவேன் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே.

பச்சரிசி, தாம்பூலம், சர்க்கரை, உரு 1008.

கல்வியில் சம்பாஷிக்க.

கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே.

தேங்காய், பழம், தாம்பூலம், உரு-108.

மனவருத்தந் தீர.

எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாங்
கந்தா கதிர்வே லவனே யுமையாண்
மைந்தா குமரா மறைநா யகனே.

சர்க்கரை, தாம்பூலம், உரு-1008.

ஆனந்த நடனங்காண.

ஆறா றையுநீத் ததன்மே னிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே.

சர்க்கரை, பானகம், இளநீர், உரு-1008.

தற்சொரூபங் காண.

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே.

தேங்காய், பழம், தாம்பூலம், உரு-108.

தன்னை அறிந்துகொள்ள.

தன்னந் தனினின் றதுதா னறிய
வின்னும் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே.

நெய், பாயசம், பழம். உரு-108.

அவா வறுக்க.

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே.

சர்க்கரை, பொங்கல், தாம்பூலம், பழம், பால், உரு-1008

நினைத்தபடி தரிசனம் கொடுக்க.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

சர்க்கரை, கடலை, தாம்பூலம், உரு-108.

சலக்கரை பெற.

காணா விழியுங் கருதா மனமும்
வீணாய் விடமுன் விதியோ விதியோ
பூணா டிறமின் புனமும் வனமும்
நாணா துநடந் திடும்நா யகனே.

சாதம், புனுகு, தாம்பூலம், உரு-108.

இழந்ததைப் பெற.

ஊணே பொருளா யுழலுற் றடியேன்
வீணே கெடமுன் விதியோ விதியோ
பூணே யிமையோர் புகழே மிகயான்
சேணே பெறவேல் விடுதே சிகனே.

வாழை, மா, திராக்ஷை, உரு-108.

நோய் தீர.

கழுவா ரயில்வேல் கருணைக் கடலின்
முழுகார் குறுகார் முளரிக் கைக்கொண்
டொழுகார் வினையூ டுழலா தவரோ
வழுகார் தெழுநோ யதிபா தகனே.

கரும்பு, இளநீர், கதலிப்பழம், உரு 108.

மோக்ஷ சாதனம் பெற.

விண்ணார் பதமும் விரிநீர் புடைசூழ்
மண்ணார் பதமும் மகிழேன் மகிழேன்
தண்ணா ரமுதே சயிலப் பகையின்
கண்ணா ரமுதே கனியைப் பெறினே.

பழம், பால், இலை. உரு-108.

உச்சாடனஞ் செய்ய.

உனையே யலதோர் பரமுண் டெனவே
நினையே னெனையூழ் வினைநீ டுமதோ
கனையேழ் கடல்போல் வருகார் சமணர்
முனையே தெறுசண் முகவே லவனே.

கிருதம், குழம்பு, கிழங்கு, பால், உரு-108.

சத்துருவைச் சங்கரிக்க.

இரவும் பகலுந் துதிசெய் திருதாள்
பரவும் பரிசே பரிசின் றருள்வாய்
கரவுண் டெழுசூர் களையக் கதிர்போல்
விரவுஞ் சுடர்வேல் விடுசே வகனே.

வடை, பணியாரம், மாங்காய், தோசை, உரு-1008.

புகழ் பெற.

இலகுந் துடிநே ரிடையார் விழிகூ
ரலகம் பெனவே வறியா தழிகோ
கலகந் தருசூர் கதறப் பொருதே
மூலகம் புகழ்பெற் றிடுமோ தயனே.

பால், பொங்கல், பானகம், உரு-1004,

உலகநடை யறிய.

மாதோ மலமா யைமயக் கவழிஞ்
சூதோ வெனமெய்த் துணியா வெணையின்
றேதோ விருள்செய் துநிறைந் திடுவார்
தீதோ டவருள் சிவதே சிகனே.

பாயசம், வெல்லம், பாக்கு, வெற்றிலை, உரு-108.

தேர்ந்து கொள்ள.

களபிம் படிறுங் கதமும் படுமென்
னளவுங் கதிர்கொண் டருள்சேர்ந் திடுமோ
விளகுங் குறமின் னிருகொள் முலையும்
புளகம் புரவப் புணர்வே லவனே.

நல்ல வெல்லம், நாவற்பழம், உரு-108.

தேசம் செழிக்க.

வாழைக் கனிமா மதுரச் சுளையே
ஏழைக் கரிதென் றிடுவா ருளரோ
பானழப் பயிர்செய் திடுசிற் பரையின்
பேழைப் பொருளா கியவே லவனே.

கற்கண்டு, பழம், கரும்பு, இளநீர், உரு-1020.

செங்கோல் செலுத்த.

சதிகொண்ட மடந்தையர் தம்மயலிற
குதிகொண் டமனத் தனெனக் குறியேல்
மதிகொண்ட நுதற்குற மங்கை குயந்
துதிகொண் டுமணந் தருடே யவனே.

வெல்லம், கதலிப்பழம், உரு-108.

செங்கோல் நடக்க.

தாயே யெனையா டனிவே லரசே
காயே பொருளாய்க் கனிகை விடுமோ
பேயே னிடையென் பெறவந் தெளிதாய்
நீயே மறவா நெறிதந் ததுமே.

கனி, சர்க்கரை, கற்பூரம், உரு-1100.

நகரி சோதிக்க.

சின்னஞ் சிறியேன் சிதைவே செயினும்
பென்னம் பெரியோர் பிழைசெய் குவரோ
கன்னங் கரியோன் மருகா கழறத்
தன்னந் தனியே தனையாண் டவனே.

கரும்பு, இளநீர், தாம்பூலம், கனி, உரு-1008.

படை வெல்ல.

துடிபட் டமடந் தையர்கு றையிலே
குடிபட் டிடுமென் குறைகட் டறுமே
வெடிபட் டெழுசூர் கிளைவே ரொடுசென்
றடிபட் டிடவென் றமரும் பதியே.

முத்து, பவழம், முழுநீலம், உரு-108.

எதிரி முறிய.

கல்லே மனமுங் கணையே விழியும்
வில்லே நுதலும் பெருமல் லியர்வாய்
சொல்லே பதமாய்த் துடிபட் டழிய
வல்ல னலனியான் மயில்வா கனனே.

தோசை, வடை, பாயசம், பழம், உரு-1008.

கொலை களவு வஞ்சகந் தீர.

கலைகற் கினுமென் கவிபா டினுமென்
நிலைகற் கினுமென் நினைவந் துணராக்
கொலைகற் றிடுவோர் கொடுவஞ் சகமா
மலைகட் டறவென் றழிள்வாய் ருகனே

தேங்காய், சர்க்கரை, தேன், பாக்கு, இலை, உரு-108.

அபசாரம் வராமலிருக்க.

சனகா தியருக் கரியா தமியை
யெனகா ரணமா கவிரும் பினைநீ
கனகா சனவில் லிகளிக் கவரு
மனகா வமலா வமரா பதியே.

பால், பழம், பாக்கு, வெற்றிலை, உரு-108.

அற்பரை நீக்க.

கல்லே னயலார் கவியைப் பொருளாய்ப்
புல்லே னவர்வாழ் வுபுரிந் தருள்வாய்
வல்லே யினிவந் தருளா யணியா
நில்லே னிறைநெஞ் சொடுவே லரசே

பழம், பால், பொங்கல், உரு-108.

மறுதெய்வந் தொழா திருக்க.

மஞ்சைப் புரையார் மதிதோன் றுதலால்
பஞ்சைப் பயில் தேவரொ டிம்பர்களு
னெஞ்சைப் பிரியாய் நிகழ்மா மதியின்
பிஞ்சைப் புனையும் பெருமான் மகனே.

பரிமளகந்தம், பழம், புஷ்பம், உரு-1008.

விதிப்படி பணிவிடை செய்ய.

விதிவந் தணைசெய் விமலன் கழலே
கதியென் றடைவார் கடனு வதுவே
பதிகண் பிணியோ டழிநல் குரவும்
மதிசஞ் சலமும் மண்ணுய் விடுமே.

தேங்காய், பழம், சீனிசர்க்கரை, இலை, உரு-108.

குருவுக்குப் பணிவிடை செய்ய.

என்னே ரமும்நின் னிருதாண் மலரைப்
பொன்னே யெனயான் புனையப் பெறுமோ
அன்னே யமுதே யயில்வே லரசே
கொன்னே பிறவிக் குறைபெற் றிடினே.

பழம், அதிரசம், பாக்கு, இலை, உரு-108.

குருவுக்கு விதிப்படி பணிவிடை செய்ய.

அருளைத் தரும்நின் னடியிற் பணியா
மருளைச் சிதையா மதிகெட் டவர்தம்
குருளைத் திசையிற் குருபொன் வினவும்
பொருளைத் தெளியப் புகடே சிகனே.

அன்னம், பால், அதிரசம், கற்கண்டு, உரு-108.

தொண்டராக.

தொண்டா கியநந் துயர்தீ ருமருந்
துண்டா கியுமென் றுலேவாய் மனனே
வண்டார் குழல்வள் ளிமணந் தருளும்
தண்டா யுதவேள் சரணந் துதியே
கரும்பு, இளநீர், கதலிப்பழம், உரு-108.

கிருபையால் பதம்பெற.

அழியா நிலேதந் தருள்சே வலனே
விழியா லுணர்வார் விதமே புகல்வாய்
பழியா புகழார் பழிநண் பிகழா
ரொழியா ரொழியா ருலகியா வையுமே.
கரும்பு, தோசை, கடலே, வடை, உரு-1008.

தெய்வ நீதியாக.

துனிநு ளும்விடாது தொடர்ந்த பல
னினிநா னணுகா மையியம் பினுல்
பனிநாண் மதிசூடி பணிந்து தொழுந்
தனிநா யகனு கியசண் முகனே.
வெல்லம், தேங்காய், வெண் பசும்பால், உரு-108.

ஞானம் பெற.

ஞானந் தனேநின்று நடந்த விடா
மோனந் தனேயென்று மொழிந் திடுமோ
ஆனந்த நடத்த னளித் தருளும்
மானந் தனிவேல் மயில்வா கனனே.
இட்டிலி, பணியாரம், கடலே, உரு-108.

பரமார்த்த மடைய.

மதமுஞ் சினமும் வளருந் தருவே
சதமென் றுணரும் சனனுக் கெளிதோ
கதமுந் தியருள் சுனிவித் திடுவேல்
பதமுஞ் சுரமும் பதமே பெறவே.
தோசை, வடை, தேன், பழம், உரு-1008.

பஞ்ச பூதங்களை அறிய.

அய்யா வுடலுண் மயமா றுளதால்
அய்யா றையும்நீ யறிவித் தருள்வாய்
செய்யா முருகா திகழ்வே லரசே
அய்யா குமரா அருளா கரனே.

பச்சரிசி, வெல்லம், தாம்பூலம் உரு-1008.

குருவாக.

நவியென் றிடுகண் மடவார் நனிகேள்
செவியென் றயில்வேள் புகழ்சென் றிலதோ
கவியென் றவன்வார் கழல்பெற் றிலதோ
ரவியென் றவன்வாழ் புவியன் றியதே.

செங்கழு நீர்ப்பூ, சிறுபயறு, பழம் உரு-1008.

தானே குருவாயிருக்க.

பெரியோ ரெனினும் புலையோ ரெனினும்
சிறியோ ரெனினுந் தெளிவோ ரவரே
குறியோ ரெனவும் குருவா வருவா
னெறியோ டொழுகுப் நிலைபெற் றிடினே.

சர்க்கரை, கடலை, தாம்பூலம் உரு-108.

பத்தி செய்ய.

பத்திக் கயலே னனிநின் பதமும்
சித்திக் கயலா தெனுந்திண் ணமுதே
புத்திக் கடலே பொருவே லரசே
முத்திக் கனியே கனிபுங் கவனே.

தேங்காய், பழம் உரு-108.

மகா தேசிகனுக.

பேயா கிலும்நன் றதிலும் பிறிதென்
றேயா தனையந் தடிமைத் தொழில்கொண்
டோயா தெனைநீ யொழியத் தகுமோ
வாயா ரமுதே மயில்வா கனனே.

ஏழுபழம், இருபதுவடை உரு-1020.

கடவுள் துணையாயிருக்க.

மிகவுங் கொடியேன் விதியண் டியவங்
திகமே பரமும் பெறவின் றிசைவாய்
சுகமும் ககமும் தொடர்வேல் கொடுமுச்
சகமுந் தணிகாத் தருள்சண் முகனே.

பணியாரம், பால், பழம், தேங்காய் உரு-108.

கடவுளை ஏவல்கொள்ள.

நசையன் பிலர்பா னயவா தொழியின்
வசையுண் டெனுமவ் வழிநின் றருள்வாய்
விசையம் பெருசூர் வெருவப் பொருதெண்
டிசையும் புகழத் திகழ்வே லவனே.

தேங்காய், பழம், உரு-108.

கற்பகத்தரு பெற.

உறுகற் பகமென் றுனையே யடைவே
னிறுகற் பகைவற் கிதமோ துவதோ
தெறுகற் சிலைகொண் டெயில் செற்றிடுபூண்
டறுகட் கெவியன் றருள்புத் திரனே.

பொங்கல், மாவு, புதுமலர்கள், உரு-1004.

கவடுதீர சுவாமி பார்வையாயிருக்க.

கள்ளம் படுகட் கடையார் கடைதே
ருள்ளம் படவென் றகலக் களைவாய்
பள்ளம் படுநீ ரெனவே பரிவின்
வெள்ளம் படுநல் வழிவே லவனே.

வடை, பணியாரம், மாம்பழம், உரு-108.

பெண்ணாசை தீர.

வள்ளைக் குழல்மங் கையர்சிங் கியிலே
கொள்ளைப் படுமென் குறைதீ ருமதோ
வெள்ளைத் தனிமால் விடையன் புகழும்
பிள்ளைப் பெருமா ளெனும்பெற் றியனே.

பால், பொங்கல், பழம், தாம்பூலம், உரு-108.

### தன்னையடுத்தோர் மாயையகல.

வளையுஞ் சகமா யைமயக் கில்விழுந்
 துளையுந் துயரின் னுமுணர்ந் திலையே
வளைகொண் டபிரான் மருகா வடுசூர்
 களையுஞ் சினவெங் கதிர்வே லவனே.

அதிரசம், பால், அன்னம், தாம்பூலம், உரு-108.

### பழவினை நீக்க.

பண்டே தொடர்பற் றுருசெற் றமெனும்
 வெண்டே ரைமகிழ்ந்து விழித் திடவோ
கண்டே குறமங் கைதனைக் களவில்
 கொண்டே கடிதே சியகொற் றவனே.

சர்க்கரை, பொங்கல், உரு-108.

### சர்வமும் நன்றுயிருக்க.

பொன்னுவல் கெடப் பொழியும் புகழோ
 ரின்னு ரினியா ரெனவெண் ணுவரோ
துன்னார் கிளைவே ரறவே தொடும்வேல்
 மன்னு பொதுவாய் மழையும் பெயுமே.

தேங்காய், கடலை, தேன், பழம், உரு-1020.

### சர்வமுமொன்றுய்க் காண.

பொரியும் புனலும் புதிதும் முதிதுங்
 குறியுங் குணமுங் குலமுங் குடியும்
நெறியும் பரிசொன் றுமிலா நிலையா
 னறியத் தரவம் வேலா யுதனே.

பழம், தேன், பால், கனி, உரு-100,000.

### அடக்கலம் பெற.

என்னே ரமதோ தெரியா திருநாம்
 அன்னே ரமதொன் றுகா தெனமுன்
சொன்னேம் நமனே துவவோ துவவோ
 தன்னேர் குகனே சரணுன் னடியே.

அன்னம், பாயசம், அதிரசம், கரும்பு, உரு-1020.

பெரியோ ராக.

தெரியத் தெரியச் செயலுற் றிடுமுன்
திரியப் பொருளைச் சொலுநா ளுளதோ
கரிபெற் றிடுமன் கணவா குறமின்
பரியப் பெரிதும் பணியுத் தமனே.

தேங்காய், பழம், சீனிவெல்லம், உரு-108.

தடுத்தாட் கொள்ள.

மடிமைப் படினும் மயலுற் றிடினும்
அடிமைச் சூரியா ரருள்சே ருவரே
குடிமைக் கிலதோர் கொடிவெற் பிணையிற்
படிமைப் புயலே பரிவா யினியே

வெல்லம், சர்க்கரை, பழம் உரு-108.

பாயசம் அண்டாமல் வேடம் கொள்ள

வரிவேல் விழியால் வலைவீசு மினர்
புரிவே லையிலே பொருதிக் களைவாய்
பரிவே டம்புரிந் ததுபோ லவுணர்த்
தெரிவேன் முனைமே லெரிசே வலனே.

பாயாசம், தேன், பழம், உரு 1008.

விதியை வெல்ல.

நனவிற் பருநல் லுலகத் தனையும்
கனவிற் பொருளாய்க் கருதா வெனைநீ
வினவிற் சொலநா வுளதோ விதியைச்
சினவிற் சிறைவிட் டருடே சிகனே

நெல்லன்னம், நெல்லிக்கனி, உரு-108.

சகல பாசமு மற.

காடும் மலையுங் கடலும் முருளச்
சாடுந் தனிவே லுடையாய் சரணம்
ஆடும் மயில்வே லரசே சரணம்
பாடும் வரதற் பரனே சரணம்.

வடை, அதிரசம், மாம்பழம் உரு-108,

இருவரும் ஒன்றுயிருக்க.

அனியாய மிதென் றவரே மடவார்
துனியார் பவமுந் துயருங் களைவார்
கனியார் முருகன் கழல்பெற் றிடுவா
ரினியா ரினியா ரிவருக் கிணையே.

தேங்காய், சர்க்கரை, சிறுபயறு, கனி உரு-1008.

சிவசாயுச்சியம் பெற.

ஆளா யயில்வே ளடியிற் படிவார்
கேளாற் பிறரைக் குறிசெய் தழியார்
மாளார் சமனுல் மறுகார் பகையால்
மீளார் வினையால் வெருவா ரவமே.

அப்பளம், தேங்காய், வடை, கடலை உரு 1028.

வா ழ் த் து.

வாழ்வா ருறவாய் மகிழ்வார் பலருந்
தாழ்வார்க் கருளுந் தமனீ யலையோ
பேழ்வா யரவும் பிறைவெள் ளிறகுஞ்
சூழ்வார் சடையார் தொழுதே சிகனே.

பால், பொங்கல், பழம், தேங்காய் உரு-1008.

க ந் த ர நு பூ தி
மு ற் றி ற் று.

---

திருத்தணிகை

# முருகக்கடவுள் பேரில்

# மாதப்பதிகம்.

வெண்பா.

தணிகா சலமேவுந் தற்பரனை வேண்டித்
துணிவா யிருபதிகஞ் சொல்ல — மணிசேர்
பணிதுலங்கு தோளான் பகரானை மாமுகன்று
ளணியாய் தலைக்கணிகு வாம்.

சித்திரைமாதம்.

அத்திமுகத்தோ னருந்துணைவாவிவ் வகிலமெல்லாஞ்
சுத்தியொருநொடிக் குள்ளேவலஞ்செய்த சூத்திரனே
முத்தமிழ்க்கீர னிடர்தீர்க்கத்தட்சண முயன்றதுபோல்
சித்திரைமாதம் வருவாய்தணிகையிற் சேவகனே.

வைகாசிமாதம்.

கையாறநின்கழல் போற்றிசெய்தேனென் கனவிலெல்லாம்
மெய்யாகநீவந்த துண்மையென்றுவிந்த மேதினியில்
செய்யாவினையென்ன செய்திருந்தாலுமச் சீற்றமற்று
வையாசிமாதம் வருவாய்தணிகையில் வாழ்பவனே.

ஆனிமாதம்.

மானிலமளந்த மான்மருகாயிந்த மானிலமும்
ஞானியுமுனிவரும் நான்முகனுந்தொழு நாயகனே
தேனில்விழுந்த யீப்போல்திகைத்துனைத் தேடுகின்றேன்
ஆனிமாதத்தில் வருவாய்தணிகையி லாண்டவனே.

ஆடிமாதம்.

ஓடியுலாவும் பருவத்திலேயிந்த வூழ்வினைதா
னோடித்துடர்ந்து தையோயிதற்கென்ன நானறிவேன்
பாடித்துதிக்கும் பதங்கொடுத்தாயந்தப் பக்குவம்போல்
ஆடிமாதத்தில் வருவாய்தணிகையி லாண்டவனே.

ஆவணிமாதம்.

சேவல்கொடியுடை சேவகனேதுதி செய்பவர்க்குங்
காவடிக்கொண்டு வருமடியார்க்குங் கருணைவைத்து
மாவினையாவையுந் தீர்க்கவென்றேமலை மேவிநின்றாய்
ஆவணிமாதம் வருவாய்தணிகையி லானந்தனே.

புரட்டாசிமாதம்.

இருட்டானமேனி யசுரரைச்சாய்த்து யிமையவர்மேல்
அருட்பார்வைநோக்கிய யாண்டவனேயடி யேனைவினை
வெருட்டாமல்கார்க்க வேண்டுகின்றேன்வெற்றி மாமயில்மேல்
புரட்டாசிமாதம் வருவாய்தணிகையிற் புண்ணியனே.

அற்பிசிமாதம்.

கப்பியவூழ்வினைத் தீர்ப்பையெண்றேநின் கமலமதில்
ஒப்புவித்தேன்மனத் துள்ளதெல்லாமிகு வுத்தமனே
தப்பிதமெத்தனை செய்திருந்தாலுநின் தஞ்சமென்றேன்
ஐப்பிசிமாதம் வருவாய்தணிகையி லற்புதனே.

கார்த்திகைமாதம்.

தீர்த்தமனேகங்கள் மூழ்கிவந்தேன்வினை தீர்ந்திலையால்
மூர்த்திகண்மூவர் முதல்வனுக்கேமறை முடிவுரைத்து
கீர்த்திவகித்த சண்முகனேகதி வேறறியேன்
கார்த்திகைமாதம் வருவாய்தணிகையிற் காவலனே.

மார்கழிமாதம்.

சீர்மலிந்தோங்கு முலகமெல்லாம்நின் சேவடிக்கே
கார்மலிந்தோங்கு வண்ணமன்றோயின்பக் கட்டுரையால்
ஏர்மலிந்தோங்கு கவிவாணரன்பர்சொல் லேற்றதுபோல்
மார்கழிமாதம் வருவாய்தணிகையில் மன்னவனே.

தைமாதம்.

பொய்யானவாழ்க்கையை மெய்யாகநம்பியிப் பூதலத்தில்
மையாடுகண்ணியர் மயலால்மெலிந்து மயங்குகின்றே
னையாவுனையன்றி திக்கறியேன்வினை யார்தவிர்ப்பார்
தைமாதந்தன்னில் வருவாய்த்தணிகைத் தயாபரனே.

மாசிமாதம்.

பூசித்திறைஞ்சு மடியாரிருதயம் பூரிக்கவன்பு
நேசித்துவந்து வினையுங்கவலையும் நீக்குகின்ற
தேசிகனேதெய்வ நாயகனேயுனைத் தேடுகின்றேன்
மாசிமாதத்தில் வருவாய்தணிகையில் மாமணியே.

பங்குனிமாதம்.

எங்கெங்குமோடியும் வினையகலாமென் னிருதயத்தை
பங்கிட்டுனின்மலர் பதத்தில்வைத்தேனிது பத்தியமாம்
மங்களவள்ளியுந் தெய்வானையோடு மனமகிழ்ந்து
பங்குனிமாதம் வருவாய்தணிகையிற் பண்ணவனே.

மாதப்பதிகம் முற்றிற்று.

# வாரப்பதிகம்.

ஆதிவாரம்.

நீதிக்கிசைந்த தெய்வமென்றேயிந்த நீணிலத்தோர்
ஓதித்துதிக்கு முண்மையினாலெந்த னூழ்வினையைச்
சோதித்துநீக்கிச் சுகத்தைக்கொடுக்குநற் றேசையுடன்
ஆதித்தவாரம் வருவாய்தணிகையி லாண்டவனே.

சோமவாரம்.

பொங்குகடல்சூ ழுலகமெல்லாமுன்னைப் போற்றுதலால்
அங்கந்தளர்ந்துமிக மெலிந்தடியேனுனக் கபயமென்றேன்
எங்குந்திரிந்து உழலாமலென்முறை யேற்றருளித்
திங்கட்கிழமை வருவாய்தணிகையிற் றேசிகனே.

மங்களவாரம்.

ஒவ்வாதவாசைப் பெருவாரியில்நெஞ்சு நூஞ்சலிட்டால்
இவ்வாறுநல்ல நிலையினிற்கேனென்ன வூழ்வினையோ
இவ்வாறுயென்னை யயலாய்நினைக்கிலிங் காருதுணை
செவ்வாய்க்கிழமை வருவாய்தணிகையிற் சேவகனே.

புதவாரம்.

இதமாகநெஞ்சுக் கெத்தனைச்சொன்னாலு மிவ்வுலகை
சதமாகவேநம்பி வாதிக்குதேயிந்த சஞ்சலத்தை
பதமாகநீக்கி நினையேதொழப் பச்சைமாமயில்மேல்
புதவாரந்தன்னில் வருவாய்தணிகையிற் புண்ணியனே.

குருவாரம்.

ஒருவருந்துணையிலை யில்லையென்றேயிந்த னுயர்பதத்தை
மருவிப்பிடித்து மன்றாடுவேன்மன மேணிரங்காய்
அருமாமறைக்கு ஆதியனேயென்னை யாதரிச்சுக்
குருவாரந்தன்னில் வருவாய்தணிகைக் கொற்றவனே.

சுக்கிரவாரம்.

கள்ளமனத்தின் கவலையுந்தேகக் கடுவினையும்
எள்ளத்தனையு மில்லாமற்காக்க யிதுசமயம்
வள்ளிப்புனத்தில் வெகுவித்தைசெய்த வாலிபனீ
வெள்ளிக்கிழமையில் வருவாய்தணிகையில் வேலவனே.

சனிவாரம்.

அனியாயநவக்கிர கச்சேட்டையினல் நொந்தடுக்குலேந்தேன்
முனியாமலென்முறைக் கேட்டருள்வாய்குரு மூர்த்தியனே
இனியேதெமக்குக் குறையென்னவென்றிரு மாந்திருக்கச்
சனிவாரந்தன்னில் வருவாய்தணிகையிற் சண்முகனே.

---

பன்னிருமாதமும் வாரங்களேழும் பகலிரவும்
உன்னிருதாட்டொழுங் கடமையுள்ளேனிது வுண்மைகண்டாய்
என்னிருதயத்துக் கவலேயுமூழு மெடுத்தெறிந்து
முன்னின்றுகார்க்குங் கடனெந்தகாலமு முன்னதுவே.

வாரப்பதிகம் முற்றிற்று.

# ஸ்ரீ வசாட்சிமாலே.

திருச்சிற்றம்பலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பண்ணேறு மொழியடியர் பரவி வாழ்த்தும்
பாதமல ரழகினையிப் பாவி பார்க்கிற்
கண்ணேறு படுமென்றே கனவி லேனுங்
காட்டென்றாற் காட்டுகிலாய் கருணை யீதோ
விண்ணேறு மரிமுதலோர்க் கரிய ஞான
விளக்கேயென் கண்ணேமெய் வீட்டின் வித்தே
தண்ணேறு பொழிற்றணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 1

பண்டுமன துவந்துகுணஞ் சிறிது மில்லாப்
பாவியேன் றனையாண்டாய் பரிவா லின்று
கொண்டுகுலம் பேசுதல்போ லெளியேன் குற்றங்
குறித்துவிடி லென்செய்கேன் கொடிய னேனைக்
கண்டுதிருத் தொண்டர்நகை செய்வா ரெந்தாய்
கைவிடே னுன்னுணை காண்முக் காலும்
தண்டுளவன் புகழ்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 2

புன்புலைய வஞ்சகர்பாற் சென்று வீணே
புகழ்ந்துமன மயர்ந்துறுகண் பொருந்திப் பொய்யாம்
வன்புலைய வயிரோம்பிப் பிறவி நோய்க்கு
மருந்தாய நின்னடியை மறந்தே னந்தோ
வின்புலைய வுயிர்கொள்வான் வரிலென் பாலவ்
வியமனுக்கிங் கென்சொல்கே னென்செய் கேனே
தன்புகழ்கா ணருந்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 3

பெருங்களப முலைமடவா ரென்னும் பொல்லாப்
பேய்க்கோட்பட் டாடுகின்ற பித்த னேனுக்
கிரும்புலவர்க் கரியதிரு வருளீ வாயே
லென்சொல்வா ரடியதற் கெந்தா யெந்தாய்
கரும்பினிழிந் தொழுகுமருட் சுவையே முக்கட்
கனிகனிந்த தேனேயென் கண்ணே ஞானந்
தரும்புனிதர் புகழ்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 4

கல்லளவா நெஞ்சமென் வஞ்ச மாதர்
கண்மாய மெனுங்கயிற்றாற் கட்டு வித்துச்
சொல்லளவாத் துன்பமெனுங் கடலில் வீழ்த்தச்
சோர்கின்றே னந்தோநற் றுணையொன் றில்லென்
மல்லளவாய்ப் பவமாய்க்கு மருந்தா முன்றன்
மலர்ப்பாதப் புணைதந்தால் மயங்கே னெந்தாய்
* சல்லமுலாத் தருந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 5

அன்னைமுத லாம்பந்தத் தழுங்கி நாளு
மலைந்துவயி றோம்பிமன மயர்ந்து நாயேன்
முன்னவினை யாற்படும்பா டெல்லாஞ் சொல்லி
முடியேன்செய் பிழைகருதி முனியே லையா
பொன்னைநிக ரருட்குன்றே யொன்றே முக்கட்
பூமணமே நறவேநற் புலவர் போற்றத்
தன்னைநிகர் தருந்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 6

* சல்லம் - என்றது பன்றிக்கோடு.

பன்னரும்வன் றுயரானெஞ் சழிந்து நாளும்
பதைத்துருகி நின்னருட்பால் பருகக் கிட்டா
துன்னரும்பொய் வாழ்க்கையெனுங் கானத் திந்த
வூர்நகைக்கப் பாவியழ லுணர்ந்தி லாயோ
வென்னருமை யப்பாவென் ஊயா வென்ற
னின்னுயிர்க்குத் தலைவாவிங் கெவர்க்குந் தேவா
தன்னியற்சீர் வளர்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 7

கோவேநின் பதந்துதியா வஞ்ச நெஞ்சக்
கொடியோர்பான் மனவருத்தங் கொண்டாழ் கின்றேன்
சாவேனு மல்லனின்பொன் னருளைக் காணேன்
றமியேனை யுய்யும்வண்ணந் தருவ தென்றோ
சேவேறுஞ் சிவபெருமா னரிதி னீன்ற
செல்வமே யருண்ஞானத் தேனே யன்பர்
காவேதந் நெறுந்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 8

ஓயாது வருமிடியான் வஞ்சர்பாற் சென்
றுளங்கலங்கி நாணியிரந் துழன்றெந் நாளும்
மாயாத துயரடைந்து வருந்தித் தெய்வ
மருந்தாய நின்னடியை மறந்திட் டேனே
தாயாகித் தந்தையாய்த் தமராய் ஞான
சற்குருவாய்த் தேவாகித் தழைத்த வொன்றே
சாயாத புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளுந் சகச வாழ்வே. 9

மின்னுளு மிடைமடவா ரல்கு லாய
வெங்குழியில் வீழ்ந்தாழ்ந்து மெலிந்தே னல்லா
லெந்நாளு முனைப்போற்றி யறியே னென்னே
யேழைமதி கொண்டேனிங் கென்செய் கேனே
யன்னையென் னப்பாவென் றரற்று மன்பர்க்
காரமுதே யருட்கடலே யமரர் கோவே
தன்னார்வத் தமர்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 10

உ

சிவமயம்.

அகத்தியரருளிய

# முருகர் பஞ்சகம்.

குகனே வருக களங்கமிலாக் கோனே வருக கறைமிடற்றோன்
மகனே வருக மனம்பூத்த மலரே வருக வோராறு
முகனே வருக சிவானந்த முதலே வருக வடியாரின்
அகனே வருக பழனிமலை யரசே வருக வருகவே. 1

கந்தா சரணம் மயில்வேற்செங் கரனே சரணங் காமாரி
மைந்தா சரணம் செந்திருமான் மருகா சரணம் வறியேன்றன்
சிந்தா குலந்தீர்த் தருள்செய்யுஞ் சேயே சரண மெனைக்காக்கும்
எந்தாய் சரணம் பழனிமலை யிறைவா சரணஞ் சரணமே. 2

சிவமே போற்றி சிற்சபையோன் செல்வா போற்றி கௌமாரர்
தவமே போற்றி விண்ணுலகத் தலைவா போற்றி யென்போல்வார்
பவமே வொழிக்க வந்தருளும் பதியே போற்றி யந்நாளில்
அவமே பொடித்த பழனிமலை யண்ணா போற்றி போற்றியே. 3

நாதா தருக நலமெல்லா நண்பே தருக வுனைவேண்ட
போகா தருக மெய்ஞ்ஞானம் புனிதா தருக கருணைபொறை
தாதா தருக கல்விகுணம் தயையே தருக கேட்டவெலாம்
ஈதா வெனுமுன் பழனிமலை யிறைவா தருக தருகவே. 4

கூர்வேல் வாழி தேவர்தொழுங் குமரன் வாழி நடனமயில்
சீர்மன் வாழி வலனுயர்த்த சேவல் வாழி வள்ளிதெய்வப்
பெருமான் வாழி பேரிசா பெரியோர் வாழி செஞ்சாலி
ஆர்வன் பண்ணைப் பழனிமலை யப்பன் வாழி வாழியவே. 5

முருகத்தியானம் முற்றுப்பெற்றது.

# திரிலோக மோகனாங்கி.

இது விக்கிரமாதித்தன் கதை, மதனகாமராஜன் கதை, அராபிக் கதைகளைப்போல் புராதனக்கதைகளி லொன்று. இதில் சுந்தராகரன் என்னும் ராஜகுமாரன தன் தந்தைக்கு நேரிட்ட துன்பத்தை நீக்கும் பொருட்டு இக்கதாநாயகியினிடமிருக்கும் (சிரிக்கும் வெற்றிலை குதிக்கும் பாக்கை) அபகரித்துக் கொண்டுவர சிங்கிலி தேசம் சென்று அவள் வசிக்கும் கோட்டைக்குள் பிரவேசித்து அவள் நித்திரையி லிருக்கையில் அவைகளைக் கைப்பற்றிவருப போது அவள் விழித்துக் கொண்டு தன்னிடமிருந்த அவைகளைக் காணாததும் ராஜகுமாரனைப் பின்தொடர்ந்து அவனை அழைத்துக்கொண்டுபோய் தன்னிஷ்டத்தை நிறைவேற்றும்படி வேண்ட, அன்னவளுக்கிருக்கும் சாபததை ஏற் கனவே அறிந்திருந்த ராஜகுமாரன் அன்னவளை ஏமாற்றி 10-நாள் சென்றதும் அவளை கலியாணம்செய்து அவளுடன் தன்னகரமடைந்து தன் தந்தைக்குண்டாயிருந்த துன்பத்தை தீர்த்த இவ்விஷயங் களைப் படிக்கப்படிக்க மனம் கரையும் என்றால் இக்கதையைப் படிக் கத் தொடங்கினால் முழுதும் படிக்காமல் வைத்துவிட மனம் பொருந் தார்கள். இதன் விலை ரூபா 1 0 0

## நீங்கள் ஒன்றை மறந்து விட்டீர்களே!

## அது என்ன தெரியுமா?

# விநாயக புராண வசனம்.

எக்காரியங்களும் விக்கினமின்றி நிறைவேறும் பொருட்டு சகல ராலும் வழிப்பட்டு வருக கடவுள் விநாயகப் பெருமானே யாதலால் அன்னவரின் திருவிளையாடல்களும், அவரைப் பூஜித்து முக்தி யடைந்தவர்களில் சரித்திரங்களும், அவரைப் பூஜிப்பதற்குறிய சோடசம், அஷ்டோத்திரம், சகஸ்ர நாமங்கள் முதலான மந்திரங் களும் தெளிவான தமிழ் நடையில் எழுதி சகலரும் வாசித்தறியும் பொருட்டு உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது அழகிய பயிண்டு. பெரிய புத்தகம் விலை ரூபா 4 0 0

# ரூபாவதி அல்லது சிதம்பரசாமியார்

## (இது ஓர் இனிய துப்பறியும் நாவல்.)

இந்நாவலானது புதிதாக அனுபவமுதிர்ந்த கதாசாரிய மொருவரால் எழுதப்பட்டது. இதில் வெளியிட்டிருக்கும் துப்பறியும் சூழ்ச்சிகள் வேறெந்த நாவல்களிலும் காணப்படாத புது விசேடமாகத் தோன்றும் இதை எல்லோரும் வாங்கி வாசிக்கும்பொருட்டே குறைந்த விலைக்கே விற்கப்பட்டு வருகிறது. இந்நாவல் நாவிற்கு நலமும், காதிற் கின்பமும், மனதிற்கு மகிழ்ச்சியும் அளிக்கக்கூடிய விதமாய் வரையப்பட்டுள்ளது. இதன் விலை அணா 12

---

எனது விலாசம்:—மயிலை - கன்னியப்ப முதலியார்,

நெ-43, கிழவசெட்டி தெரு, சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்.

ஹிப்னடிஸ மெஸ்மெரிச மென்னும்

## வாயுவேக மனோவசிய சாஸ்திரம்

இந்த நூலில் மனோவசியத்தைப் பற்றியும் அதை அப்பியாசிக்க வேண்டிய வழிகளைப்பற்றியும் நன்கு எழுதப்பட்டிருப்பதுடன் உலகில் பிறர் கண்களுக்குத் தெரியாமல் உலாவும் வழியைப்பற்றியும இறந்த பெரியோர்களுடன் எப்படிப்பேசுவது என்பதைப்பற்றியும் நன்கு எழுதப்பட்டிருக்கின்றது. மனோவசிய சக்தியில் நாம் உலகத்திற்குச் செய்யக்கூடிய நன்மை மிகுந்த செல்வாக்குடன் இருக்க விரும்புகின்றவர்களுக்கு இந்நூல் தேவாமிர்தம் போன்றதாகும். ஜெர்மெனி அமெரிக்கா ஆங்கில நாட்டார் அனுபவநூல். சித்திரப்படங்களுடன் விசித்திர செய்கைகள் அறியும் சித்திரநூல். இதை வாசித்தால் இறந்தகாலம் நிகழ்காலங்களில் நடக்கும் ஒவ்வொருவிஷயமும் அறிந்துக் கொள்ளவும் சமத முன்னோர்களுடன் பேசவும் நோய்களைநீக்கும்வகை ஞான திருஷ்டிநோக்கம் முதலியவைகளை வாசித்து தெரிந்துக் கொள்ளக்கூடிய புத்தகம் விலை ரூ 1 80

பூலோகரகசியம் எனும்

### மதிமோசக் களஞ்சியம்

(முதற்பாகம்.)

இப்பிரபஞ்சத்தில் நடக்கும்சகல விதமான மோசங்களுக்கும் உட்படாமல் இருப்பதற்கும் சன்மார்க்கவழியில் நடந்துக் கொள்வதற்கும் நமது செல்வத்தை விருத்திசெய்து கொள்வதற்கும் பூலோக அனுபவங்களை நன்றாய் தெரிந்துக் கொள்வதற்கும் பெண்டுகள் பிறர்வஞ்சகச் சொல்லை கேளாதிருப்பதற்கும் போலி மந்திரங்களை நம்பாதிருப்பதற்கும் உண்மையை நன்றாய்கண்டு உணர்வதற்கும் 141-மோசங்களும் அடங்கியது படங்களும்பாட்டுகளும் விலை ரூ 1.

பூலோகரகசியம் எனும்

### மதிமோசக்களஞ்சியம்

(இரண்டாம்பாகம்.)

கடவுள் வழிபாட்டின் மோசம் ஆலயதர்மகர்த்தர் மோசம் ஜாதிமத போராட்டமோசம் தாசிகளை ஏமாற்றும்வண்டிகார் மோசம்போலீஸ் சிலம்போக் சேவகர் மோசம் ஜப்பான் ஜர்மன் மோசம் சிப்பாய்கள் மோசம் புருஷனுக்கு மனைவி செய்மோசம் வக்கீல் லாயர் சுயராஜ்ய ஜஸ்டிஸ் கட்சி மோசம் போலிக் கவிராயர் மோசம் மடாதிபதிகளின் அடாத மோசம் முனிசிபாலிட்டியின் முழு மோசம். இதைப்போன்ற மோசம் 120-அடங்கிய படங்களுடன் ரூ 1.

## தேவேந்திரநாத் மாயாஜால விநோதம்.

இதில் அஷ்டமாசித்திகள் செய்யலாம் வசியவகைகள் செய்யலாம் மணலைகிளரி விநாயகரை காட்டலாம் மகேந்திரஜாலம் செய்யலாம் இந்திரஜாலம் நினைத்த தேவர்களை காட்டலாம் கோகர்ண வித்தை கண்கட்டு ஜாலம் ஜாலகரடி வித்தைகள் பாதாளமைஜாலம் மோடிவைக்கும் வித்தை மனிதர்களுக்கு சிரசில்லாமல் செய்யும் ஜாலம் சத்துரு நாசமாகும் ஜாலம் காசுகள் உண்டாகும் வித்தைஇருட்டில் சூரியனை காட்டும் ஜாலம் சர்வ வாத்திய ஜாலம் இராஜவசியம் எக்காளம் வாசிக்கும் ஜாலம் வழக்குகள் வெல்லும் ஜாலம் பூதப பிசாசுகள் விலகும் ஜாலம் இதைப்போன்ற அற்புத ஜாலம் 2000-சேர்ந்தது இதன் விலை ரூபா 1.

**மயிலை - கன்னியப்ப முதலியார்,**

நெ-43, கிழவசெட்டி தெருவு, சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்.